Not for sale

நவம்பர் - டிசம்பர் 2020

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom




## இயேசுவின் தலைப்புகள்

- தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்
- மனுக்குலத்தின் புதிய ஆட்சியாளர்
- மனுக்குலத்தின் சிறந்த எதிர்கால ஆசிரியர்
- அவருடைய கிறிஸ்துவின் வல்லமை
- ஜீவனைகொடுக்கும் ஆவி
- அவர் வந்து சமாதானத்தை சுவிசேஷமாக அறிவித்தார்
- தாவீதின் சிங்காசனத்தின் மீது
- என் நீதி வெளிப்பட போகிறது
- நான் உன்னை நியமிக்கிறேன்

ஏசாயா 9:6-7

# ஆதியிலே



நம்முடைய கர்த்தராகிய இயேசுவோடு தொடர்புடைய, மிகவும் அங்கீகரிக்கப்பட்ட வேத பகுதியில் ஒன் "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்படடார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிரு அதிசயமானவர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய இராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை, சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்."

ஹெரால்டின் இந்த பிரதி இந்த தீர்க்கதரிசனத்தை விரிவாகக் விளக்குகிறது. இனி மனிதனின் இரட்சிப்பிற்கான தேவனின் திட்டத்தைப் பற்றியும், அந்தத் திட்டத்தில் நம் கர்த்தர் வகிக்கும் பங்கைப் பற்றியும் பேசுகிறது.

"**தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்**" என்ற பாடம், நம்முடைய கர்த்தர் ஏன் முதற்பேறான குமாரனாக பூமிக்கு வந்தார், அவர் பிறந்த இடம், அவருடைய ஆரம்பகால வாழ்க்கையின் நிகழ்வுகள் அவரைப் பற்றி என்ன வெளிப்படுத்துகின்றன என்பதை ஆராய்கிறது.

"**மனுக்குலத்தின் புதிய ஆட்சியாளர்**" என்ற பாடம், தேவனின் வரவிருக்கும் பூமிக்குரிய இராஜ்யம் கிறிஸ்துவின் தோள்களில் எவ்வாறு நிலைபெறும் என்பதையும், அந்த இராஜ்யத்தின் தலைவராவதற்கு இயேசு எவ்வாறு தகுதி பெற்றார் என்பதையும், தாவீதுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதிகளை அவர் எவ்வாறு நிறைவேற்றுவார் என்பதையும் காட்டுகிறது.

"**மனுக்குலத்தின் சிறந்த எதிர்கால ஆசிரியர்**" என்ற பாடம், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் அற்புதமான குணலட்சணம் பற்றியும், அவர் மனுக்குலத்தின் ஆசிரியராக எவ்வாறு பணியாற்றுவார் என்பதை பற்றியும் விவரிக்கிறது.

"**அவருடைய கிறிஸ்துவின் வல்லமை**" என்ற பாடம், இயேசு எவ்வாறு ஒரு வலிமையான தேவனாக இருப்பார், அவருடைய வல்லமையின் ஆதாரம் என்ன, அவர் தனது பூமிக்குரிய இராஜ்யத்தில் அந்த வல்லமையை எவ்வாறு பயன்படுத்துவார் என்பதை எல்லாம் கருதுகிறது.

"**ஜீவனைக்கொடுக்கும் ஆவி**" என்ற பாடம் நித்திய பிதாவாக இயேசுவின் பங்கு மற்றும் மனுக்குலத்தின் எந்த (வர்க்கத்தை) அவர் உயிர்ப்பிப்பார் என்பதை ஆராய்கிறது.

"**அவர் வந்து சமாதானத்தை பிரசங்கித்தார்**" என்ற பாடம் மனுக்குலத்தின் அமைதிக்கான தேவையையும், இயேசு தம்முடைய பூமிக்குரிய இராஜ்யத்தில் அவர்களுக்கு எவ்வாறு அமைதியைக் கொண்டுவருகிறார் என்பதையும் ஆய்வு செய்கிறது. "தாவீதின் சிங்காசனத்தில்" என்ற பாடம் நம்முடைய உயிர்த்தெழுந்த கர்த்தர் எவ்வாறு வல்லமையுடன் ஒரு இராஜகுமாரனாகவும், தாவீதின் சிங்காசனத்திற்கு தகுதியான வாரிசாகவும் இருப்பார் என்பதைக் காட்டுகிறது.

"**வெளிப்பட வேண்டிய என் நீதி**" என்ற பாடம் கிறிஸ்துவின் இராஜ்யம் அல்லது சாம்ராஜ்யம் எவ்வாறு நீதி எனும் அஸ்திபாரத்தின் மீது என்றென்றைக்கும் ஸ்தாபிக்கப்படும் என்பதைக் கருதுகிறது.

இறுதியாக, "**நான் உன்னை நியமிப்பேன்**" என்ற பாடம் தனது ஒரே பேறான குமாரனின் மூலமாக மனிதனின் இரட்சிப்புக்கான திட்டத்தை நிறைவேற்றுவதில் தேவனின் அர்ப்பணிப்பு மற்றும் வைராக்கியத்தை ஆராய்கிறது.

இயேசு கிறிஸ்துவின் இந்த தீர்க்கதரிசனம் உங்கள் இருதயங்களையும் மனதையும் அவருடைய முன்மாதிரிக்கு இணங்குவதற்கும், அவரது பலியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும் ஏதுவான அதிக வைராக்கியத்துக்கும் உண்மைக்கும் ஊக்குவிக்கட்டும். ஆமென்.

**நவம்பர் / டிசம்பர் 2020, தொகுப்பு 102, எண் 6**


**தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்** 2
நமக்கொரு பாலகன் பிறந்தார்

**மனுக்குலத்தின் புதிய ஆட்சியாளர்** 6
அவர் தோளின் மேல் கர்த்தத்துவம் இருக்கும்

**மனுக்குலத்தின் சிறந்த எதிர்கால ஆசிரியன்** 10
அற்புதமான ஆலோசகர்

**அவருடைய கிறிஸ்துவின் வல்லமை** 14
வல்லமையுள்ள தேவன்

**ஜீவனைக் கொடுக்கும் ஆவி** 18
நித்திய பிதா

**அவர் வந்து சமாதானத்தை சுவிசேஷமாக அறிவித்தார்** 21
சமாதானப் பிரபு

**தாவீதின் சிங்காசனத்தின் மீது** 25
அதிகரிப்புக்கு முடிவில்லை

**என் நீதி வெளிப்படப்போகிறது** 29
நீதியின் ஆளுகை

**நான் உன்னை நியமிக்கிறேன்** 32
சேனைகளின் கர்த்தரின் வைராக்கியம்

**இன்றைய தீர்க்கதரிசனம்** 31
ஆபிரகாமின் உடன்படிக்கை

நமக்கொரு பாலகன் பிறந்தார்

# தேவன் இவ்வளவாக உலகத்தை நேசித்ததால்

"ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசாயா 7:14)



**Ray Charlton**

ஏசாயா 9:6,7 வசனங்கள் பெரும்பாலும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களில் சேர்க்கப்படுகிறது. "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்.." என்ற இந்த தீர்க்கதரிசனத்தின் முதல் பகுதியின் முக்கியத்துவத்தை எத்தனை பேர் நிறுத்தி சிந்திக்கிறார்கள்?

### ஒரு குழந்தையை உருவாக்குவதா?

யேகோவா தேவன் ஆதாமை சிருஷ்டித்த போது," தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7) என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இயேசுவும் அதே விதத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால், அவர் ஒரு பரிபூரண மனிதராகவும், ஆதாமுக்கு மீட்கும் பொருளாகவும் இருந்திருப்பார். இருப்பினும், இந்த அணுகுமுறை பல சிக்கல்களை உருவாக்கியிருக்கும். முதலாவதாக, இது இயேசுவின் மனித அனுபவங்களை மட்டுப்படுத்தியிருக்கும், மேலும் குழந்தை பருவத்தில் நிகழக்கூடிய பல சம்பவங்களில், மனிதனின் பலவீனங்களின் உணர்வை அவரால் பெற முடியாமலும் போயிருக்கும். (மத்தேயு 8:17) இரண்டாவதாக, இயேசு நியாயப்பிரமாணத்தின் கீழ் பிறந்திருக்க மாட்டார், ஆகவே நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ளவர்களை அதன் சாபத்திலிருந்து மீட்டெக்க முடியாது. ஆகையால், பரிசுத்த ஆவியை பயன்படுத்தி, மரியாளின் கருவுக்கு உயிர் கொடுத்து, ஒரு குழந்தையை உருவாக்கும் செயல்முறையைத் தொடங்கியது.

### ஏன் ஒரு குழந்தை?

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் " என்று ஏவாளையும் ஆதாமையும் ஏமாற்றியபின் யேகோவா தேவன் சாத்தானிடம் கூறினார். "ஸ்திரீயின் வித்து கிறிஸ்துவே .... ஆதாமின் வித்து அல்ல" என்று பாஸ்டர் ரசல் மறுபதிப்பு 1610 ல் குறிப்பிடுகிறார். "நாம் புத்திர சுவிகாரத்தையடையும் படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக," (கலாத்தியர் 4:4) என்று பவுல் எழுதினார். இயேசு சிறுவயதிலிருந்தே அனைத்து நியாயப்பிரமாணங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இயேசு எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டார். இந்த விருத்த சேதனம் யேகோவா தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் இடையிலான உடன்படிக்கையின் அடையாளமாக இருந்தது. அதனுடன், பின்வரும் எச்சரிக்கையும் வழங்கப் பட்டது - "நுனித்தோலின் மாம்சம் விருத்த சேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளை யிருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்றார்." (ஆதியாகமம் 17:14) இயேசு மாம்சத்தில் விருத்தசேதனம் செய்யப்பட்டது மட்டுமல்லாமல், ஜீவனை பெறுவதற்கு மிக முக்கியமான, இருதயத்தின் விருத்த சேதனத்தையும் வாழ்நாள் முழுவதும் செயலாற்றினார். (ரோமர் 2:29)

### ஏன் ஒரு குமாரன்?

ஒரு தந்தைக்கும் அவரது முதல் பிறந்த மகனுக்கும் இடையே ஒரு சிறப்பு உறவு உள்ளது. இந்த மனுக்குலத்தை மீட்டெடுப்பதற்காக அவருடைய ஆயத்தத்தை, யேகோவா தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி, அவருடைய மிகபெரிய தியாகத்தை வெளிப்படுத்தினார். லோகாசுக்கும் யேகோவா தேவனுக்கும் இடையிலான இந்த உறவைப் பற்றி சாலொமோன் எழுதுகிறார்,"கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்.", "நான் அவர் அருகே செல்லப்பிள்ளையா யிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியா யிருந்தது, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களி கூர்ந்தேன்." (நீதிமொழிகள் 8:22, 30) இந்த அன்பு மத்தேயுவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது, "அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன் என்று உரைத்தது." (மத்தேயு 3:17)

### ஏன் ஒரு கன்னி?

ஏசாயா 7:14வில் உள்ள நம்முடைய ஆரம்ப வசனம், அதை தீர்க்கதரிசனமாக கூறுகிறது. "ஒரு கன்னிகை



கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள்.." "கன்னி" என்று மொழிபெயர்க்கப்பட்ட சொல் அல்மா (*almah*, Strong's H5959,) என்ற எபிரெய வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு "மறைக்கப்பட்ட அல்லது தனிப்பட்ட" என்று பொருள். இது சரியான அர்த்தத்தை கொடுக்கவில்லை.

புதிய ஏற்பாட்டில், தேவதூதருக்கு பதிலளித்த மரியாள் ஒரு கன்னியாக இருந்தாள் என்பதை உறுதியாகக் காட்டுகிறது. "இது எப்படி ஆகும், நான் புருஷனை அறியேனே.." (லூக்கா 1:34)

"ஏன் ஒரு கன்னி" மற்றும் "ஏன் முதல் பிறந்த குமாரன்" என்பதில் இரண்டு அம்சங்கள் கவனிக்கப் படலாம்.


(1) முதல் பிறந்தவர் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர் யோசேப்பும் மரியாளும் இயேசுவை எருசலேமுக்கு அழைத்து வந்து, அவர்களின் முதற்பேறானவராக அவரை முன்வைத்தார்கள் என்று லூக்கா பதிவுசெய்கிறார். "முதற்பேறான எந்த ஆண் பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்கவும்," (லூக்கா 2:23, யாத்திராகமம் 13:2)

(2) முதல் பிறந்த குமாரன் பிறப்புரிமையைப் பெற்றார். "முதற்பேறான" குமாரனுக்கு குடும்பத்தில் சிறப்புரிமைகள் இருந்தது. அவர் சிறப்பான குடும்ப ஆசீர்வாதத்தையும், ஆவிக்குரிய மற்றும் சமூகத் தலைமையையும், தந்தையின் உடைமைகளில் இரட்டிப்பான பகுதியையும் பெற்றார். அல்லது மற்ற குமாரர்களுக்கு கிடைத்ததைவிட இரண்டு மடங்கை பெற்றார். இயேசுவைப் பொறுத்தவரை, அவர் பிதாவின் "ஒரே பேறானவராக" இருந்தார். இதனால் முதல் பிறந்ததற்கான முழு பரம்பரைக்கான உரிமையையும் பெற்றிருந்தார். அடுத்து குடும்பத்தை ஆதரிக்கும் பொறுப்பையும் பெற்றார். "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது." (மத்தேயு 28:18) என்று இயேசு கூறினார். மேலும், "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும்," (பிலிப்பியர் 2:9-10) என்று பவுல் விளக்குகிறார்.

இயேசு மரணபரியந்தம் உண்மையுள்ளவராக இருந்து, தாவீதின் சிங்காசனத்தையும் சுதந்தரித்தார். (சங்கீதம் 132:11, ஏசாயா 9:7, லூக்கா 1:32)

### பிறந்த இடம்

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது." (மீகா 5:2) இயேசுவின் பிறப்பிடத்தை மீகா முன்னறிவித்திருந்தும், யோசேப்பும் மரியாளும் கலிலேயாவில் உள்ள நாசரேத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இயேசு நாசரேத்தில் பிறந்தது தர்க்கரீதியாக இருந்திருக்கும். ஆனால் அகஸ்து ராயன் ஒரு கணக்டுெப்புக்காக ஒவ்வொருவரும் தனது சொந்த நகரத்திற்கு செல்ல வேண்டும் என்று ஆணையிடுவார் என்று தேவன் முன்னறிந்திருந்தார். (லூக்கா2:4-6) வருங்கால இராஜாதி இராஜாவின் பிறப்பும், இந்த உலகிற்கு அவர் வருவதும், அவருடைய உயர்வான



நிலைக்கு ஏற்ப, நிச்சயமாக ஒரு அரண்மனையில் நடந்திருக்கவேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. லூக்கா பதிவு செய்த படி, "அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்." (லூக்கா2:7) இந்த அறிவிப்பு மரியாளுக்கோ அல்லது இஸ்ரயேலில் உள்ள தலைவர்களுக்கோ கொடுக்கப்படாமல், வயல்களில் ஒரு சில தாழ்ந்த மேய்ப்பர்களுக்கு மட்டுமே இந்த அறிவிப்பு, தேவனை புகழ்ந்து பல தேவதூதர்களால் கொடுக்கப்பட்டது. (லூக்கா 2:14) ஏன் ? ஏனென்றால், இயேசு இந்த பூமிக்குரிய இராஜாவைப் போல இருக்கக் கூடாது, அல்லது அவருடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றும் வரையில் அவர் பரலோக இராஜாவாகவும் இருக்க முடியாது. (ஏசாயா53:12) இயேசுவின் மகிமையும், இராஜரீகமும் பரலோகத்தில் இருக்கும், அவருடைய ஆட்சி இறுதியில் பூமியிலும் நீடிக்கும். மிக தாழ்ந்த நிலையில் இயேசுவின் பிறப்பு மற்றும் மேய்ப்பர்கள் மட்டும் அறிவிப்பு. காரணம் என்ன?

இயேசு பிறந்த நேரத்தில் மேய்ப்பர்கள் இஸ்ரயேலில் பெரிதாக மதிக்கப்படவில்லை. இது அவரது பிறப்பின் தாழ்வான நிலையை அதிகரித்தது. அவருடைய பிறப்பின் நோக்கத்தையும், சிலுவையின் மரணம் வரை தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் இயேசுவின் விருப்பத்திற்கும் இது எவ்வளவு பொருத்தமாக உள்ளது. (பிலிப்பியர் 2:8) ஏசாயா அவருடைய பிறப்பை முன்னறிவித்து, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்குகிறார். ஏசாயா 53 ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, அவருடைய தாழ்ந்த பிறப்பு, அவர் ஒரு இராஜாவாக அல்ல, ஒரு தாழ்ந்த தச்சனுடைய குமாரனாக, அவர் மனுஷரால் வெறுக்கப்பட்டு, கைவிடப்படவேண்டும். (மாற்கு 6:3) அவர் இராஜாவாக ஆட்சி செய்ய வராமல், மீட்கும் பொருளாக தன்னை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வந்தார். இஸ்ரயேலில் காணாமல் போன ஆடுகளுக்காக அனுப்பப்பட்ட தேவனுடைய ஆட்டுக்குட்டியை வாழ்த்த இந்த தாழ்ந்த மேய்ப்பர்கள் வந்திருந்தது எவ்வளவு பொருத்தமாக உள்ளது. மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல அவர்கள் துன்பப்பட்டு, சிதறடிக்கப்பட்டதால், இயேசு அவர்களுக்காக இரக்கப்பட்டார். (மத்தேயு9:36)

**குழந்தை இயேசுவை பார்க்க வந்த மூன்று அறிஞர்கள் (Magi)**

"கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டோம்..." என்று கூறி யூதர்களின் இராஜாவை வணங்க கிழக்கிலிருந்து இவர்கள் வந்தார்கள் எனப்தை தவிர, வேறு எந்த தகவல்களும் இவர்களைப் பற்றி கொடுக்கப்படவில்லை. "...கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் "என்று அவர்கள் விசாரித்தார்கள். மேலும் "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" (மத்தேயு 2:1-7,9) என்று இவர்கள் எருசலேமில் விசாரித்தார்கள். இது இராஜாவாகிய ஏரோதை பெரிதும் கலங்கடித்தது. உடனே மேசியாவின் பிறப்பிடத்தை குறித்து விசாரிக்க அவர் பிரதான ஆசாரியரையும், வேதபாரகர்களையும் வரவழைத்தார்.

அவர் பெத்லகேமில் பிறப்பார் என்று கூறப்பட்டது, ஏரோது இரகசியமாக அறிஞர்களை அழைத்து நட்சத்திரத்தின் தோற்றத்தின் சரியான நேரத்தை விசாரித்தார். யூதர்களின் இராஜாவுக்கு வந்த புறஜாதி அறிஞர்கள் மரியாதை செலுத்தியது சுவாரஸ்யமானது தான். யூதர்களும் ரோமானியா ஆட்சியாளர்களும் இயேசுவின் பிறப்பை பொருட்படுத்தவில்லை. இராஜாவாக பிறந்த ஒருவர் அரண்மனையில் வசிப்பார் என்று மேகி நம்பினார்கள். அதனால் தான் அவர்கள் எருசலேக்கும் ஏரோதிடமும் சென்றார்கள். கடைசியில் அவர்கள் இயேசு இந்த வீட்டிற்கு வந்தபோது, அவர்கள் தங்கள் உத்தமத்தை விளங்கபண்ணினார்கள். "அவர்கள் அந்த வீட்டுக்குள்பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்." (மத்தேயு 2:11) இந்த பரிசுகள் அவரது எதிர்கால வேலைகளின் ஆவிக்குரிய அடையாளமாக இருந்தது. பொன் அவருடைய அரசாட்சியையும், தூப வர்க்கம் அவருடைய ஆசாரியத்துவத்தையும், வெள்ளைப்போளம் அவருடைய பலியையும் அடையாளப்படுத்தியது.

மாகி ஏரோதிடம் திரும்பவரவில்லை. ஒரு கனவில் எச்சரிக்கப்பட்டு, அவர்கள் வேறு வழியில் வெளியேறினார்கள். இதனால் கோபமடைந்த ஏரோது, "அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு,

மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலைசெய்தான்." (மத்தேயு 2:16) தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி, பூமிக்குரிய ஆட்சியாளர்களும், சாத்தானும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை எவ்வாறு முறியடிக்க முயற்சிப்பார்கள் என்று மத்தேயு விளக்கினார் : "புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று, எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று." (மத்தேயு 2:17-18)

**எகிப்துக்கு விரைந்தார்கள்**

எகிப்துக்கு செல்லும்படி ஒரு தேவதூதரால் யோசேப்பு சொப்பனத்தில் எச்சரிக்கப்பட்டு, யேகோவா தேவனால் நேரடியாக வழிநடத்தப்பட்டார். "அவர்கள் போனபின்பு, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கே இரு என்றான்." (மத்தேயு 2:13) அவர்கள் பயணிக்கக்கூடிய ஆபத்தான நேரமாகிய இரவில் வெளியேறியது, இந்த பயணத்தின் அவசரத்தை காண்பிக்கிறது. மாகி கொண்டு வந்த தங்கம், தூப வர்க்கம், வெள்ளைப் போளம் ஆகியவை அவர்களின் பயணத்திற்கு நிதியளித்திருக்கலாம். எகிப்துக்கான இந்த பயணம் ஓசியா 11: 1 ம் வசனத்தை நிறைவேற்றியது. "எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்."



தெய்வீக விடுதலையைத் தேடுவதிலும், சகித்துக் கொள்ள நமக்கு மிகவும் கடினமான விஷயங்களிலிருந்தும் தப்பிப்பதற்கான வழியைத் திறப்பதிலும் நாம் கவனமாக இருக்க வேண்டும்" என்று பாஸ்டர் ரசல் குறிப்பிடுகிறார். முன்னதாகவே நடந்து கொண்டிருக்கும் வரிசையில் தேவனுடைய போக்கு எதிலும் தலையிடவில்லை. ... அவர் ஏரோதை சாகடிக்கவில்லை, அல்லது அவரது அதிகாரம் மற்றும் வல்லமையில் தலையிடவும் இல்லை. இத்தகைய தீவிர நடவடிக்கைகளுக்கான நேரம் இன்னும் வரவில்லை. (Reprint 1681:6) ஏரோது இறந்து விட்டதாகவும், இஸ்ரயேலுக்குத் திரும்பும்படி கர்த்தருடைய தூதன் மீண்டும் அவர்களுக்கு முன் தோன்றும் வரையில் சில மாதங்கள் எகிப்தில் தங்கியிருந்தார்கள். (மத்தேயு 2:20-21) அவர்கள் எகிப்திலிருந்து திரும்பியதும், யோசேப்பு மற்றொரு கனவினாலும் குடும்பத்தினாலும் எச்சரிக்கப் பட்டார். "இப்போதும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவே, நீ கேள்; உனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிற உன் தோழரும் கேட்கக்கடவர்கள்; இவர்கள் அடையாளமாயிருக்கிற புருஷர்; இதோ, கிளை என்னப்பட்டவராகிய என் தாசனை நான் வரப் பண்ணுவேன்." (சகரியா 3:8) "அவர் நசரேயர் என்று அழைக்கப்படுவார்" (மத்தேயு 2:22-23)என்று தீர்க்கதரிசி களின் மூலமாக பேசப்பட்டது நிறைவேறும்படியாக இது நடந்தது. ஏசாயாவில் உள்ள தீர்க்கதரிசனங்களை மறுபரிசீலனை செய்தால், இயேசு ஒரு தாழ்மையான வாழ்க்கையை நடத்துவார் என்றும், அவருடைய ஜனங்களால் வெறுக்கப்பட்டு, நிராகரிக்கப்படுவார் என்றும் காணப்படுகிறது. இது நிச்சயமாக அக்காலத்தின் நசரேயர்களோடு பொதுவான அணுகுமுறையுடன் உடன்படுகிறது.(யோவான்1:46,7:52)

**ஆலயத்தில் சிறு பிள்ளையாகிய இயேசு**

இயேசுவின் வாழ்க்கையில் நடந்த இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வு லூக்கா 2:41-52வில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. "ஒரு யூத சிறுவன் தனது பன்னிரண்டாம் ஆண்டை எட்டும்போது, "நியாயப்பிரமாணத்தின் குமாரன்" என்று கருதப்பட வேண்டும் என்பது யூதர்களின் வழக்கம் என்றும், இதனால் அவர் நியாயப்பிரமாணத்தின் கீழ் பொறுப்பெற்றவராகவும், பண்டிகைகளில் ஆசரிக்கக்கூடியவராகவும் இருந்தார்" என்று பாஸ்டர் ரசல் குறிப்பிடுகிறார். (4957:3, 3711:2, 2559:4)

இயேசு பன்னிரண்டு வயதான போது, பஸ்கா பண்டிகையை அனுசரிப்பதற்கு தனது குடும்பத்தினருடன் எருசலேமுக்கு பயணித்தார். திரும்பும் போது, இயேசு

தங்களோடு இல்லை என்பதை அவரது பெற்றோர் கண்டுபிடித்தார்கள். மரியாளும், யோசேப்பும் மூன்று நாள் பயணமாக எருசலேமுக்கு திரும்பி சென்று, ஆலயத்தில் அவரை கண்டுபிடித்தார்கள். அவர்கள் ஏன் நேராக அவருடைய தந்தையின் வீடாகிய ஆலயத்திற்கு செல்லவில்லை?

அந்த வயதில் அவர் ஆசிரியர்களிடையே அமர்ந்து, பேசிக்கொண்டிருப்பார் (கேள்வி கேட்பதும், பதில் அளிப்பதும் )என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. "அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள்." (லூக்கா2:41-47) "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்." (லூக்கா2:52) என்று கூறி, இயேசுவின் குழந்தைப் பருவத்தை விவரிக்கும் கடைசியான பதிவாக இந்த அறிக்கையை லூக்கா அளிக்கிறார். லோகாசாக இருந்த இயேசு, தனது தந்தைக்குக் கீழ்ப்படிந்திருந்தார். ஒரு மனிதனாக அவர் குழந்தை பருவத்திலிருந்தே மிகவும் மாறுப்பட்ட சூழ்நிலைகளிலும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். "என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே." (நீதிமொழிகள் 1:8) ஆலயத்தின் படிப்பினைகள் மற்றும் அவரது பூமிக்குரிய பெற்றோருக்கு அவரது கீழ்ப்படிதல் ஆகியவை அவருடைய எதிர்கால ஊழியத்தில் அவருக்கும் உதவியது. "அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டிய தென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்." (லூக்கா24:44) என்றும் இயேசு கூறினார்.

### அவர் தோளின் மேல் கர்த்தத்துவம் இருக்கும்

# மனுக்குலத்தின் புதிய அட்சியாளர்



*Jerry Wesol*

"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்." (எபேசியர் *1:9-10*)

உலக தோற்றத்திற்கு முன்பே, மனுக்குலத்தை மீட்கும் தொகை அவசியம் என்பதை தேவன் முன்னறிந்திருந்தார் என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. ஆகையால், அவர் தனது மனித சிருஷ்டிப்பை மீட்பதற்கும், அதில் தம்முடைய குமாரனுக்கு மதிப்பை கொடுக்க விரும்பி ஒரு திட்டத்தை வகுத்தார். "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே ......அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்ட..." (1பேதுரு1:19-20)

மனிதனின் இரட்சிப்புக்கான அவரது திட்டம் வெற்றிகரமாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்த, தேவனுக்கு அவருடன் முற்றிலும் இணக்கமான ஒரு பொறுப்பாளர் தேவைப்பட்டார். இந்த நபர் சிருஷ்டிகருக்கும் அவருடைய மனித சிருஷ்டிபுக்கும் இடையிலான மோதலைப் புரிந்து கொண்டு அதைத் தீர்க்க தேவனின் விருப்பத்தைப் பின்பற்ற தயாராக இருக்கவேண்டும். "அப்பொழுது நான். இதோ, வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்." (சங்கீதம் 40:7-8) என்று இவரை குறித்து தாவீது எழுதுகிறார்.



தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தை பெற்று, ஆட்சி செய்வதற்கான முழு உரிமையையும் வழங்கப்படுவதற்காக தேவன் சட்டங்களையும் பூமிக்குரிய ஏற்பாடுகளையும் ஏற்படுத்தினார். (கொலோசெயர்1:18, ரோமர்14:11) ஜனங்கள் அனைவரும் நீதியுள்ள ஆட்சியையும், நீதியுள்ள ஒரு ஆட்சியாளரையும் விரும்பி, (ஆகாய்2:7) தங்கள் முழங்காலில் நிற்க வைப்பதற்கு, முதலில், இந்த தற்போதைய தீய உலகத்தின் வானங்களும், பூமியும் அசைக்கப்பட்டு, இறுதியில் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும். (கலாத்தியர் 1:4, 2பேதுரு 3:7-13)

**கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருந்தது**

ஏசாயா 9:6ல் "கர்த்தத்துவம்" என்ற சொல், "ஆளுமை அல்லது ஆதிக்கம்" என்று மற்ற மொழிபெயர்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது அர்த்தமுள்ளதாக இருக்கிறது. தேவன் ஆதியில் மனிதனுக்கு பூமியின் மேல் ஆதிக்கம் கொடுத்தார், ஆனால் அவருடைய கீழ்ப்படியாமை மற்றும் பாவத்தினால் அந்த அதிகாரத்தை இழந்துவிட்டார். (ஆதியாகமம்1:28, எபிரெயர்2:8) இயேசுவுக்கு வழங்கப்பட்ட பொறுப்பு, சுமை மற்றும் ஆதிக்கத்தை அவர் ஏற்றுக்கொண்டர் என்பதை "அவருடைய தோள்களின் மேல்" என்ற சொற்றொடர் குறிப்பிடுகிறது. பொறுப்பை ஏற்றுக்கொள்வதைக் குறிக்க, ஆங்கிலத்தில் உள்ளதைப் போலவே, எபிரெய மொழியிலும் "தோள்களின் மேல்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. ஏசாயா பயன்படுத்தின சொற்றொடர் இராஜரீகமான தலைமையையும் குறிக்கிறது."அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று

தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்."(எபிரெயர்5:8-10) என்ற வார்த்தைகளை இது நமக்கு நினைவூட்டுகிறது.

ஆனால் தேவனுடைய குமாரன் அதிகாரம் பெறுவதற்கு முன்பு, இந்த ஆதிக்கத்திற்கும், அதிகாரத்திற்கும் இயேசுவைத் தகுதிப்படுத்த சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அவர் (1) பாவம் மற்றும் மரணத்தின் கண்டனத்திலிருந்து மனுக்குலத்தை மீட்பதற்கான விலையை, மீட்கும் தொகையாக வழங்க வேண்டியிருந்தது. மற்றும் (2) அவர் மரண பரியந்தம் அவருடைய கீழ்ப்படிதலை நிரூபிக்க வேண்டியிருந்தது. இதைச் செய்வதற்கான இயேசுவின் விருப்பம் எபிரெயர் 10:5,7 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. "ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்;", "அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின் படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்."

"கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்." (ஏசாயா53:10) தேவன் தமது குமாரனின் துன்பத்தில் மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக, இயேசுவுக்கும் மனுக்குலத்திற்கும் மகிமையான முடிவுகளை அவர் முன்னதாக கண்டார். மனுக்குலத்தின் வேதனைகளையும் துக்கத்தையும் அனுபவிப்பதற்கு இயேசுவின் காயங்களும், துன்பங்களும், அவரை அனுமதித்தது. "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல்,



எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபிரெயர் 4:15) இயேசுவுக்கு ஏராளமாக வெகுமதி அளிக்கவும், மனுஷனுக்கு தேவையான நீதியுள்ள ஆட்சியாளராக அவரை உருவாக்கவும், தேவன் அவருடைய விசுவாசத்தையும், உத்தமத்தையும் மரணபரியந்தம் நிரூபிப்பதற்கு அனுமதித்தார். (Reprint 3591, 5878) "இருப்பினும், மனிதனாகிய கிறிஸ்து இயேசு, இரண்டாம் ஆதாம் என்று கருதுவது சிலரின் மிகப் பெரிய தவறு. அது அப்படி அல்ல! அப்போஸ்தலர் அறிவித்தபடி (1கொரிந்தியர் 15:47) இரண்டாம் ஆதாம் வானத்தில் இருந்து வந்த கர்த்தர் - இவர் பரலோகத்திலிருந்து வந்த கர்த்தர் மற்றும் அவரது இரண்டாம் வருகையின் போது கல்வாரியில் தனது சொந்த விலை மதிபற்ற இரத்தத்தால் மீட்கப்பட்ட ஆதாமின் இனத்திற்கு ஒரு தந்தையின் பொறுப்புகளையும், கடமைகளையும் ஏற்றுக்கொண்டவர். மனித இனத்தின் தந்தை அல்லது ஜீவனை கொடுப்பவராக நம்முடைய கர்த்தராகிய இயேசு இருப்பதற்கு முன், அவர் நீதியான தண்டனையின் கீழ் இருந்த ஆதாமின் சந்ததியை கிரயத்திற்கு வாங்குவது அவசியமாக இருந்தது. மாபெரும் இந்த வேலையை நம்முடைய ஆண்டவர் தமது முதலாம் வருகையில் நிறைவேற்றினார்." (*The Atonement Between God and Man*, Page 137)

இயேசுவின் பிறப்பின் போது (லூக்கா 2:10) தேவதூதர் அறிவித்ததைப் போலவே, ஏசாயா 9: 6-7ன் தீர்க்கதரிசனம் இஸ்ரயேலுக்கு பெரும் மகிழ்ச்சியின் செய்தியாக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், அவர்களின் ஆவிக்குரிய தலைவர்கள் மேசியாவின் மகத்தான சாதனைகள் மற்றும் ஆட்சி பற்றி முன்னறிவித்த தீர்க்கதரிசனங்களை மட்டுமே தேடினர். தேவனுடைய திட்டத்தில் ஒரு முக்கிய பகுதியாக அவரது பெரும் துன்பத்தையும் மரணத்தையும் சொன்ன தீர்க்கதரிசனங்களை அவர்கள் சரியாக உணராமல் புறக்கணித்தனர். உபாத்தியாய் இருக்கும் நியாயப்பிரமாணத்தால் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தப்படுவதற்கு பதிலாக (கலாத்தியர் 3:24), ரோமானிய நுகத்தின் கீழ் அவர்கள் பெற்றிருந்த அந்தஸ்தை இழந்துவிடுவார்களோ என்ற பயத்தில் அவர்கள் அவரைக் கொல்ல முயன்றனர்.

அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து அவருடைய உடன்படிக்கையை கடைப்பிடித்தால் அவர்கள் இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்களின் தேசமாக இருப்பார்கள் என்று தேவன் இஸ்ரயேலுக்கு வாக்குறுதி அளித்தார். (யாத்திராகமம் 19:5,6) மேலும் தாவீது இராஜாவின் சந்ததியார் இஸ்ரயேலின் சிங்காசனத்தில் என்றென்றும் இருப்பார்கள் என்று தேவன் தாவீதுக்கு வாக்குறுதி அளித்தார். இஸ்ரயேலின் கீழ்ப்படியாமை இந்த இரண்டு வாக்குறுதிகளின் நிறைவேற்றத்தையும் எவ்வாறு பாதித்தது?

பரிசுத்த ஆவியின் குறைவினால், தேவனுடைய மீட்பின் திட்டத்தின் மூலம் பூமியின் ஆதிக்கம் மனுக்குலத்திற்கு எவ்வாறு இரட்சிப்பை அளிக்கும் என்பதை இஸ்ரயேல் புரிந்துகொள்ளவில்லை. பூமியின் அனைத்து குடும்பங்களுக்குள்ளும் இஸ்ரயேல் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாக இருந்தாலும், அவர்களின் அவிசுவாசத்தின் காரணமாக, ஆவிக்குரிய இராஜாக்கள் மற்றும் ஆசாரியர்கள் என்ற விசேஷித்த கனம், இயேசுவின் மேல் விசுவாசமுள்ள யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் வழங்கப்பட்டது. (ரோமர் 11:7, 8)

கூடுதலாக, தாவீதின் குமாரன் இஸ்ரயேலின் சிங்காசனத்தின் மேல் நித்தியமாக அமர்ந்திருப்பார் என்ற வாக்குறுதி எவ்வாறு நிறைவேறும்? இந்த வாக்குறுதிக்கு ஒரு ஆவிக்குரிய தலையீடு தேவைப்படுகிறது. இயேசு வேதபாரகர்களிடம் சம்பாஷிக்கும் போது, சங்கீதம் 110: 1 ல் இருந்து மேற்கோள் காட்டினார். "இயேசு தேவாலயத்திலே உபதேசம் பண்ணுகையில், அவர்: கிறிஸ்து தாவீதின் குமாரனென்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்கள்? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று தாவீது பரிசுத்த ஆவியினாலே சொல்லியிருக்கிறானே. தாவீதுதானே அவரை ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்." (மாற்கு 12:35-37)

இயேசு வேதபாரகர்களை ஏமாற்ற முயற்சிக்க வில்லை. அதற்கு பதிலாக, தாவீதின் வழியில் இருந்து ஒரு இராஜாவாக வாக்களிக்கப்பட்ட மேசியாவைப் பற்றி பேசும் வசனங்களை அவர் இங்கு காண்பித்தார். "உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும், உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணை யிட்டார்; அவர் தவறமாட்டார்." (சங்கீதம் 132:11-12) Jesus' lineage can be traced back to David through Joseph, his earthly stepfather, by way of Solomon's line, and through his mother Mary by way of David's son, Nathan.

துரோகத்தின் காரணமாக, சிதேக்கியாவின் காலத்தில் இஸ்ரயேல் இராஜ்யத்தை தேவன் கவிழ்த்து போட்டார். (எசேக்கியேல் 21:26-27) ஆனாலும், இஸ்ரயேலின் தோல்வி, தாவீதின் சந்ததியினரில் ஒருவர் அவருடைய சிங்காசனத்தில் என்றென்றும் அமர வேண்டும் என்று தேவன் தாவீதுக்கு கொடுத்த வாக்குறுதியை பாதிக்கவில்லை. மேசியா பின்னர் வந்து இராஜரீக செங்கோலை பெற்றுகொண்டு, தேவன் தாவீது இராஜாவுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்.

## தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற, ஒரு இராஜா மற்றும் ஒரு ஆசாரியருக்கு அவர் கொடுத்த சத்தியம்

(1) தாவீதின் வழியாக ஒரு நீதியுள்ள ஆட்சியாளர் மற்றும் (2) மெல்கிசேதேக்கைப் போல ஒரு இராஜாவையும், ஆசாரியரையும் உருவாக்க, வேண்டும் என்ற தம்முடைய வாக்குத்தத்தத்தை பரலோக தந்தை நிறைவேற்றுவார். "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்." (சங்கீதம் 110:4) மெல்கிசேதேக்கு சாலேமுக்கு இராஜாவாக மட்டும்



அல்ல (அல்லது எருசலேம், என்பதற்கு சமாதானத்தின் நகரம்) அவர் ஒரு ஆசாரியராகவும் இருந்தார். எபிரெயர் 7:1-4ல் பவுல் இதை விவரிக்கிறார். "இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டு போய், அவனை ஆசீர்வதித்தான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்; இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம். இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனா யிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான். இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்." வரக்கூடிய மேசியா ஒரு இராஜாவாகவும், ஒரு ஆசாரியராகவும் இருந்து, தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்று மெல்கிசேதேக்கு ஒரு நிழலாக காட்டினார்.

இயேசு தம்முடைய பூரண விருப்பத்தினாலும், கீழ்ப்படிதலாலும், மேசியாவின் (அபிஷேகம் செய்யப்பட்டவர்) பதவிக்கும், நித்தியமான இராஜாவாகவும், ஆசாரியராகவும் இருந்து எல்லா ஜனங்களையும் ஆசீர்வதிப்பதற்கும் தகுதி பெற்றார். "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டுவ தில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார். நியாயப் பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது; நியாயப் பிரமாணத்திற்குப்பின்பு உண்டான ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது." (எபிரெயர் 7:26-28) பவுல் கலாத்தியர் 3:29ல் எழுதியது போல, யூதர்களும் புறஜாதியாரும் இயேசுவின் உண்மையுள்ள சீஷர்கள் ஆசீர்வாதத்தின் வித்தின் ஒரு பகுதியாக இருப்பார்கள். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரம், ஆரோனின் முறைமையின்படி பலியிடக்கூடிய ஆசாரியர்களாக இராமல், தங்களை ஏற்கனவே பலி செலுத்திய பின்னர், மெல்கிசேதேக்கு சித்தரித்தப்படி, அவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து ஆட்சி செய்யக்கூடிய இராஜரீகமான ஆசாரியர்களாக இருப்பார்கள். சத்தியத்திற்கும் நீதிக்கும் உள்ள அனைத்து எதிரிகளை அப்புறப்படுத்தும் அதிகாரத்தை பெற்றிருப்பார்கள். அவர்கள் பூமிக்குரிய ஒழுங்கை மறுசீரமைத்து, மீண்டும் பூமியின் ஆதிக்கத்தை பெற மனுக்குலத்தை ஆயத்தம் செய்வார்கள்.

**பாவத்திலிருந்து மனுக்குலத்தை திருப்ப, நீதியும், இரக்கமும் உள்ள ஆட்சியாளர்**

தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றுவதே இயேசுவின் விருப்பமாகும். ஆதாமுக்கு மீட்கும் பொருளை வழங்கி, மனுக்குலத்தின் பாவ வழிகளை முறியடிக்க அவர்களுக்கு எவ்வாறு உதவுவது என்பதையும் கற்றுக்கொடுக்க, இயேசு இந்த பூமிக்கு வந்து, துன்பப்பட்டு இறந்தார். இயேசு அனுபவித்த பாடுகளினாலும், துன்பங்களினாலும் அவர் ஒரு பூரணமான அல்லது முழுமையான பிரதான ஆசாரியராக ஆனார். இதனால் அவருக்கு கீழ்ப்படியும் யாவருக்கும் அவர் நித்திய இரட்சிப்பின் ஆசிரியரானார் (எபிரெயர் 2:10, 5:9,10) 6,000 ஆண்டுகளாக வலியையும், துன்பத்தையும், மரணத்தையும் அனுபவித்த மனுக்குலம், தீமையைக் கற்றுக் கொண்டு துராக்கிரமாகிய சாத்தானின் கீழ் பாவத்தை பிரசுரிக்கவும் கற்றுக்கொண்டது. தேவனுடைய இராஜ்யத்தில் அவர்கள் நித்திய ஜீவனைப் பெற அவர்கள் பாவத்திலிருந்து நீதிக்கு மனந்திரும்புவதற்கு நீதியுள்ள ஒரு ஆட்சியாளரும், இரக்கமுள்ள ஒரு பிரதான ஆசாரியரும் தேவை. மாபெரும் இந்த மீட்பின் திட்டத்தில் மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமையின் ஒரு பகுதியாக, விசுவாசமுள்ள மணவாட்டி வகுப்பின் உறுப்பினர்களாகிய சபை, அவளுடைய ஆண்டவரோடு சேர்ந்து, இரட்சகர்களாக இருப்பதற்கான கூடுதலான ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். (ஒபதியா1:21, வெளிப்படுத்தல் 1:5-6)

பரலோகத் தகப்பன் மாபெறும் இராஜா என்ற அந்தஸ்த்தையும் பொறுப்பையும் இயேசுவின் மீது வைத்திருக்கிறார். தந்தையின் பிரதிநிதியாக, அவர் ஆயிரம் ஆண்டுகள் மகிமைப்படுத்தப்பட்ட மத்தியஸ்தராக மனுகுலத்தை ஆளுவார். அவருடைய ஆட்சி உலகின் ஒழுங்கை மீட்டெடுக்கும், எல்லா கீழ்ப்படியாமையையும் தள்ளிவிடும், நீதி மற்றும் சத்தியத்தின் ஒவ்வொரு எதிரியையும் அழிக்கும். இந்த தெய்வீக கொள்கைகளின் நண்பரான அனைவரையும் நித்திய ஜீவனுக்கு உயர்த்தும். (சங்கீதம் 2:1-6)

"ஆனால் மத்தியஸ்த இராஜ்யத்தால், மனுக்குலம் பரிபூரணமாகும்போது, பாவம் செய்வதற்கு முன்பு ஆதாம் இருந்ததைப் போலவே, அவர்கள் அனைவரும் இராஜாக்களாக இருப்பார்கள். ஆயிரவருட ஆட்சிக்கு பின்வரும் தேவனுடைய இராஜ்யம் ஒன்றுபட்ட இந்த இராஜாக்களுக்கு வழங்கப்படும். இவர்கள் அன்பின் பிரமாணத்தின் கீழ் இணக்கமாக ஆட்சி செய்வார்கள். அவர்களுடைய அதிபதி அவர்களுக்கு சேவை செய்து, அவர்களின் பிரதிநிதியாக இருப்பார். ஆண்டவரே, "உம்முடைய பரிசுத்தவான்களுக்காகவும், இந்த உலகத்திற்காகவும் உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்கிறோம். (*The Battle of Armageddon*, page 646).

# மனுக்குலத்தின் சிறந்த எதிர்கால ஆசிரியரின்



Larry McClellan

"அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான்." (லூக்கா 1: 78, 79)

அற்புதம், மகிழ்ச்சியின் என்ன ஒரு நேர்மறையான வெளிப்பாடு, ஊக்கமளிக்கும் களிப்பு, இன்பம், அதிசயம். நாம் உண்மையிலேயே இயேசுவைப் பார்க்கும் போது, அந்த "அற்புதம்" எவ்வளவு அற்புதமாக இருக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்கிறோம். அவர் பரலோகத் தந்தையின் தன்மையின் சொரூபமுமாய் மாத்திரம் இல்லாமல், அவர் தந்தையின் கண்ணின் மணியாகவும் இருக்கிறார்! இயேசு தேவனின் மகிழ்ச்சியும் இன்பமுமாய் மாத்திரமல்லாமல், வேதப்பூர்வ சாட்சியின் மூலம் அவரை நாம் அறிந்துகொள்வதால், அவர் நமக்கு எழுச்சியூட்டும் மகிழ்ச்சியாகவும் இன்பமாகவும் இருக்கிறார். இறுதியில் முழு உலகத்தின் இன்பமாக இருப்பார்.

தேவன் தம் கைகளால், தெய்வீக குயவனின் கைகளில் வளைந்து கொடுக்கும் களிமண் போன்று நம்முடைய கர்த்தரின் அற்புதமான குணலட்சணங்களை வடிவமைத்தார். ஆனால் இதற்கு நம் அற்புதமான இரட்சகர் இறுதி வரை கீழ்ப்படிந்து இருக்க வேண்டியிருந்தது. உண்மையில், இயேசு தான் அனுபவித்த காரியங்களால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் - புது சிருஷ்டியின் முதல் பலனாக பிதா தன் குமாரனை வடிவமைக்க பயன்படுத்திய சூழ்நிலைகள். இதேபோல், தேவன் தனது மகனுக்காக ஒரு அற்புதமான "மணவாட்டியை" வடிவமைக்கிறார், அவள் பூமியிலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதித்து மீட்டெடுப்பதன் மகிழ்ச்சியை இயேசுவோடு பகிர்ந்து கொள்வார்.

பிதாவின் கண்களால் வழிநடத்தப்பட்ட இயேசு, பிதா விரும்பிய திசையை தானாக முன்வந்து பின்பற்றினார் - மனித அனுபவத்திற்கு அடிபணிய பரலோக மகிமையின் ஐஸ்வரியத்தை விட்டுவிட்டு வந்தார் (யோவான் 17: 5) நம் அற்புதமான இரட்சகர் மோசமான வாசனையின் துர்நாற்றத்திற்கும், பயங்கரமான நோய்கள் மற்றும் மனிதனின் அவலங்கள், வேதனைகளால் சூழப்பட்டிருக்கவும் தன்னை சமர்ப்பித்தார். அறியாமையால், அறிவற்ற தன்மையால், அநீதியான நிலையால் மற்றும் பாவத்தால் பாதிக்கப்பட்டிருந்த மனுக்குலத்தின் உறுப்பினர்களிடையே நடக்கும்போது அவர் அவர்களின் வலியை இரக்கத்துடன் உணர்ந்தார். இயேசு தனது அன்பான நண்பர் லாசருவின் மரணத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்தபோது இரக்கத்துடன் அழக் கற்றுக்கொண்டார் - லாசருவின் அன்புக்குரியவர்கள் மீது ஏற்பட்ட துக்க கரமான விளைவுகளைக் கண்டார்.

அவரது மனித அனுபவத்தின் அகவயப்படுத்தல் உலகின் சிறந்த ஆலோசகராக மாறுவதற்கான சான்றுகளை இயேசுவுக்கு வழங்கும். மனுக்குலத்தை வழி நடத்த இயேசு இந்த அனுபவத்தைப் பயன்படுத்துவார். அவர்களுக்கு வழிநடத்துதலும் அறிவுறுத்தலும் கொடுப்பார், ஏனென்றால் அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பதை அவர் உணர முடியும், மேலும் அவருடைய பூமிக்குரிய இராஜ்யத்திற்கு ஏதுவாக தங்களை மாற்றிக்கொள்ளும்போது அவர்களின் போராட்டத்தை நன்கு புரிந்துகொள்கிறார்.

பாவம் எனும் கிருமியாலும், எதிரியாகிய இந்த உலகத்தின் தேவனால் பரப்பப்பட்ட இருளாலும் மாசுபடுத்தப்பட்ட ஒரு இருண்ட உலகத்தின் நடுவே இயேசு உலகின் அற்புதமான ஒளியாக இருந்தார். இருப்பினும், இயேசுவின் சத்திய வெளிச்சமும், தந்தையின் சொரூபம் மற்றும் கொள்கைகளின் அவரது பிரதிபலிப்பும் சிலருக்கு



கண்ணை மறைப்பது போல் இருந்தன. இருள் ஒளியை வெறுத்தது, ஏனென்றால் ஒளி இந்த உலகத்தின் தலைமைக்கும் ஞானத்திற்கும் தீர்ப்பு, குற்ற உணர்வு மற்றும் அதிகார இழப்பை கொண்டு வந்தது (கொலோசேயர் 1: 17-19) இந்த உலகத்தின் தலைமை, குறிப்பாக யெகோவா தேவனை பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள், பூமியின் முகத்தில் இதுவரை வாழ்ந்த மிக அற்புதமான மனிதனைத் தேடி கொன்றதில் ஆச்சரியமில்லை. மனுக்குல வரலாற்றில் வேறு எந்த கதாபாத்திரமும் உலகளாவிய சமூகத்தில் இதுவரை அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அவர் மனிதர்களின் ஜீவனும் வெளிச்சமுமாய் இருந்தார். (யோவான் 1: 4)

கிறிஸ்துவின் இராஜ்யத்தில், அவர் இன்னும் பெரிய அளவில் மனுக்குலத்தின் வெளிச்சமாக இருப்பார், அவரது ஒளியில் சிறகுகள் குணமாக்கும் சிறகுகளாக இருக்கும். மனுக்குலத்தின் பாவ அனுபவத்தால் ஏற்பட்ட நோய், துன்பம், வலி மற்றும் மரணம் போன்ற பல கறைகளிலிருந்து அவர் அவர்களை குணமாக்குவார். சத்தியத்தின் கதிரியக்க ஒளி, தேவனின் சத்தியம், பூமியை அறிவொளியால் மூடிவிடும், இது சாத்தான் மற்றும் அவரது கூட்டாளிகளால் வளர்க்கப்பட்ட அறியாமை, தவறான தகவல் மற்றும் தவறான விளக்கங்கள் அனைத்தையும் அகற்றும். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கிறிஸ்துவின் அறிவினால் நிறைந்திருக்கும். இயேசுவும் அவருடைய மணவாட்டியும் இணைந்து நீதியையும் அன்பையும் பற்றிய தெய்வீக பிரமாணங்களை மனுக் குலத்திற்கு கற்பித்து, அறிவுறுத்தி, வழிநடத்து வார்கள் (மல்கியா 4:2, வெளிப்படுத்தல் 20: 1-3, 21: 4, யோவான் 1:4, ஆபகூக் 2:14, ஏசாயா 1:26, எரேமியா 31: 33-34)

"இயேசுவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" ஒருவர் எழுதிய பதில் -" இயேசு மனுக்குலத்தின் அனைத்து நிலையினருக்கும் வகுப்பினருக்கும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார். உதாரணமாக, ஓவிய கலைஞருக்கு, அவர் முற்றிலும் அழகானவர். கட்டிடக் கலைஞருக்கு, அவர் மூலைக்கு தலைகல்லானவர். வானியலாளரைப் (astronomer) பொறுத்தவரை, இயேசு நீதியின் சூரியன், சுயம்பாகியிற்கு (baker) அவர் ஜீவ அப்பம். கட்டிட



அமைப்பாளருக்கு அவர் உறுதியான அடித்தளம், தச்சருக்கு அவர் கதவு மற்றும் மருத்துவருக்கு அவர் தலை சிறந்த மருத்துவர். புவியியலாளருக்கு, இயேசு யுகங்களின் கற்பாலை (Rock of ages) நகைக் கடைக்காரருக்கு, அவர் விலையுயர்ந்த முத்து, செய்தித்தாள் நிருபருக்கு அவர் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி. "கிறிஸ்தவர்களாகிய நமக்கு அவர் நம்முடைய எல்லாமே, நம்முடைய கதாநாயகன் (ஹீரோ) நம்முடைய விசுவாசத்தின் துவக்கமும் முடிவுமானவர், நம்முடைய வருங்கால மணவாளன், பரலோகத் தகப்பனுடனான நமது வழக்கறிஞர். அதேபோல், கிறிஸ்து உலகின் எல்லாமுமாய் இருப்பார். மனரீதியாக, ஒழுக்க ரீதியாக, உடல் ரீதியாக, பக்தி ரீதியாக, ஒவ்வொரு தேவையும் அவரால் முழுமையாக நிறைவேற்றப்படும். அவருடைய போதனையின் கீழ், உலகம் நீதியை நேசிக்கவும், அக்கிரமத்தை வெறுக்கவும், எல்லாவற்றையும் கண்டுபிடிக்கும், ஆதாமின் பாவத்தின் மூலம் அது இழந்ததை விடவும் அதிகமாக பெரும். இராஜ்யத்தில் அவர்கள் மகிழ்ச்சியான வாழ்வை பெறுவார்கள்.

எந்த ஆதாமின் கீழ்ப்படியாமையினால் மனுக்குலம் தனது உரிமைகளை இழந்து, நோய் மற்றும் மரணத்தில் மூழ்கடிக்கப்பட்டதோ, அதே ஆதாமின் மீட்கும்பொருளாக இயேசு வந்ததன் நிமித்தம் ஏசாயா 9:6ல் உள்ள தலைப்புகள் அனைத்தும் அவருக்கு வழங்கப்பட்டன. மனுக்குலத்தின் எதிர்கால ஆலோசகராக இயேசு இருக்க தேவையான அனைத்தும் அவருடைய முதல் வருகையின் போது அவர் செலுத்திய மீட்கும்பொருள், அவரது பலியின் காரணமாக அவரிடம் வந்தன. யோர்தானில் அமைக்கப்பட்டு கல்வாரியில் தைரியமாக முடிக்கப்பட்ட

அந்த அற்புதமான பலி, சுவிசேஷ யுகத்தின் போது கிறிஸ்தவரின் நீதிமானாக்கப்படுத்தலுக்கும், ஆயிர வருட ஆட்சியின் போது வெளிப்படும் மீட்பு வேலை மற்றும் சிலாக்கியங்களுக்கு அடிப்படையாகும். ஆம், மனித வரலாற்றில் மிக முக்கியமான இரண்டு காலங்கள் நம் கர்த்தரின் முதல் மற்றும் இரண்டாவது வருகைகள் - மற்றும் மீட்புபணியின் அற்புதமான விளைவுகள் மற்றும் மறுசீரமைப்பு.

இயேசு எவ்வளவு அற்புதமானவர்? இயேசு தெய்வீக தன்மையின் மாதிரியாக இருந்தார், மேலும் தேவனின் பிரதிபலிப்பாக இருந்தார். "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" (யோவான் 14:9) தேவனின் அழகான தன்மையின் அற்புதமான சித்திரத்தை இயேசு நமக்கு கொடுத்தார். வேதத்தின் படி இயேசுவின் கனத்தின் சில பிரதிபலிப்புகளை பார்ப்போம்.

சத்தியத்தை அறிவிப்பதில் இயேசு தைரியமாக இருந்தார். அவர் நீதியை நேசித்து, அக்கிரமத்தை வெறுத்தார். அவர் இரக்கமுள்ளவர், கிருபையுள்ளவர், இயேசு தைரியமானவர், தன்னலமற்றவர், முற்றிலும் தாழ்மையுள்ளவர். கனிவுள்ளம் கொண்ட நம் எஜமானர் மன்னிப்பை வெளிப்படுத்தினார், ஜனங்களின் உணர்வுகளை உணர்ந்தார். அவர் மற்றவர்களிடத்தில் தலையிடவில்லை, மிகுந்த சுய கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார். இயேசு ஜனங்களின் மதியீனத்தின் நிமித்தம் பொறுமை காட்டினர். ஆனால், நயவஞ்சகர்கள் மீது கடுமையாக இருந்தார். இயேசு தெய்வீக அன்பாலும், அதன் அழகான வெளிப்பாடுகள் அனைத்தாலும் நிறைந் திருந்தார். அவர் தொடர்பு கொண்ட ஒவ்வொருவரிடத் திலும் எவ்வளவு அழகாக தம் அன்பை செலுத்தினார், அந்த அரவணைப்பை எவரால் பாராட்டாமல் இருக்க முடியும். (1கொரிந்தியர்13)

இயேசுவின் எத்துணை அற்புதமான சிறந்த தன்மைகள் வேதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன! நம்முடைய ஒவ்வொரு அணுவிலும் நாம் இயேசுவை எவ்வளவு போற்றுகிறோம், வணங்குகிறோம். அவருடைய பூமிக்குரிய இராஜ்யம் மகிமையடைந்த காலத்தில் முழு உலகமும் இராஜாதி இராஜாவை , கர்த்தாதி கர்த்தாவை பாராட்டும் போதும் உண்மையாக போற்றும் போதும் எவ்வளவு அருமையாக இருக்கும். எபிரெய மொழியில் "அருமை" (wonderful) என்ற சொல் ஒரு அதிசயம் என்ற பொருளைத் தருகிறது - ஒரு அற்புதமான விஷயம். விழித்தெழுந்த மனுக்குலம் அந்த நேரத்தில் பூமியில் நிகழ்ந்த அற்புதமான விஷயத்தின் நோக்கம் மற்றும் அழகை உணரும்போது அது ஒரு அதிசயம் போல் இருக்கும் அல்லவா? இவை அனைத்தும் ஆழங்காண முடியாத அன்பின் நிமித்தம் நிகழும் - ஒரு ஞானமான அன்பான தந்தை மற்றும் மிகவும் அன்பான மகனின் அன்பினால் நடந்தது.

இயேசு ஒரு அற்புதமான ஆலோசகராகவும் இருப்பார். ஒரு ஆலோசகரின் வேலை ஒரு நோக்கத்தை மனதில் கொண்டு அறிவுறுத்துவதும் சிக்கல்களைத் தீர்ப்பதும், மற்றவர்களுக்கு வழிகாட்டுவதும் ஆகும். கிறிஸ்து இயேசுவை விடவும், அவருடைய சொரூபத்தில் இருக்க அவர் அழைத்தவர்களை விடவும் சிறந்த ஆலோசகர்கள் எவர் இருக்க முடியும்? தேவனின் சித்தத்திற்கு அடிபணிந்து, கிறிஸ்துவின் குணத்தை தங்களுள் வளர்த்துக் கொள்வதில் வெற்றி பெற்றால், அவர்கள் மரித்தோரிலிருந்து எழுந்து தெய்வீக அலுவலையும் மகிமையையும் பெறுவார்கள் (2பேதுரு1:4) "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்" (கொலோசெயர் 1:27) கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் நல்லிணக்க ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் எத்துணை அற்புதமான ஆலோசகர்களாக இருப்பார்கள் (2கொரிந்தியர் 5:18, எபேசியர் 5:32, ஒபதியா 1:21)

இந்த தெய்வீக ஆலோசகர், தலை மற்றும் சீரம், விழித்தெழுந்த மனுக்குலத்திற்கு என்ன கற்பிப்பார் ? (யோவான் 5:28, 29). மத்தேயு22: 37-38ல் இயேசு கொடுத்த இரண்டு பெரிய கட்டளைகளை அவர்கள் கற்பிப்பார்கள், அதாவது, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு



ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புக் கூருவாயாக.... உன்னிடத்தில் நீ அன்புக்கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக." இந்த கற்பிக்கும் முறையில், மனுக்குலம் ஒருவருக்கொருவரை மன்னிப்பதையும், மனக்கசப்புடன் இருக்கக்கூடாது. என்பதையும், சக மனுஷரிடம் கோபமோ கசப்போ கொள்ளக்கூடாது எனப்தையும் கற்றுக் கொள்ளும். அவர்கள் சுயநலவாதிகளாகவோ, மேட்டிமைக் கொண்டவர்களாகவோ இருக்கக் கூடாது என்பதை கற்பார்கள். எவருடனும் தீங்கு செய்யமாட்டார்கள், மற்றவர்களைப் பற்றி தீமை பேச மாட்டார்கள். இந்த அருமையான ஆலோசகர் ஒருவருக்கொருவர் இரக்கம் காட்டுவதன் மூக்கியத்துவத்தையும், மனத்தாழ்மை எனும் ஆடை அணிவதை பற்றியும், சாந்தகுணத்தை எவ்வாறு பெறுவது என்பதை பற்றியும் அவர்களுக்குக் கற்பிப்பார். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளை மனுக்குலம் கற்றுக் கொள்ளும். இருப்பினும், தேவனின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் கோரப்படும், மேலும் நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு மனுக்குலம் கீழ்ப்படிதல் காட்டுகிறதா என்று சோதிக்கப் படும். (அப்போஸ்தலர் 3:22-23, வெளிப்படுத்தல் 20: 7-9)

அற்புதமான ஆலோசகர், தலை மற்றும் சரீரம், இந்த பூமிக்குரிய இராஜ்யத்தை, முற்பிதாக்கள் என்று அழைக்கப்படும் பிரபுக்களின் மூலம் ஆட்சி செய்வார்கள். பழைய ஏற்பாட்டின் இந்த பாத்திரங்கள் மரணத்திலிருந்து விழித்தெழுந்து, உலக தலைநகரான எருசலேமிலிருந்து கர்த்தருடைய போதனைகளையும் சட்டங்களையும் அறிவிப்பார்கள் (ஏசாயா2:3, மீகா4:2) கிறிஸ்து என்னும் இந்த அற்புதமான ஆலோசகர், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் (எரேமியா31: 31-34, எபிரெயர்9: 11-28; 8: 8-12) உலகளாவிய அமைதி, அன்பு மற்றும் செழிப்புக்கு மேலோங்க வேண்டிய நீதி மற்றும் அன்பின் உலகளாவிய சட்டங்களுககு ஏதுவாக மனுக்குலத்தை அறிவுறுத்தி, வழிநடத்துவார்கள். இயேசுவின் அற்புதமான தன்மையை உள்வாங்க அவர்கள் மனுக்குலத்திற்கு கற்பிப்பார்கள், பயிற்சியளிப்பார்கள், இதனால் அவர்கள் பரலோகத் தகப்பனுடன் முழுமையாக இணக்கமாக, ஒரே மனநிலையில் வர முடியும் - இதன் விளைவாக நித்திய ஜீவனைப் பெறுவார்கள். இயேசு தனது சபையை மாற்றுகிறார். பின்னர் அவருடன் சபை உலகை மாற்றும். இயேசுவின் பரிபூரண வாழ்க்கை எல்லா மனிதர்களையும் மரித்தோரிலிருந்து மீட்டுக் கொண்டுவரக்கூடும், ஆனால் மனுக்குலம் எதிர்கொண்ட பல போராட்டங்களுடன் அடையாளம் காண அவரது மணவாட்டியான 144000 இன் கூட்டு அனுபவங்கள் தேவைப்படுகிறது. ஆகவே, கிறிஸ்து, தலை மற்றும் சரீரம், தங்கள் பணியை நிறைவேற்ற தேவையான அனைத்தையும் பெற்றுள்ளார்கள் - "ஆத்துமரட்சிப்பு"(1பேதுரு1: 9)

இறுதியாக, தேவனின் ஒரே பேறான குமாரனான இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்கு ஒரு அற்புதமான ஹீரோவாக எப்படி இருக்கிறார் என்பதை நாம் காண்கிறோம். அவர் தைரியமாக பூமிக்கு வந்தார், தனக்கு எதிரான பாவிகளின் முரண்பாட்டை சகித்துக்கொண்டார், மேலும் மனிதர்களால் வெறுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டார். உலகம் முழுவதையும் நித்திய மரணத்திலிருந்து காப்பாற்றும் ஒரு புண்ணியம்மிக்க மீட்பு பலியை செலுத்தினார். யேகோவா தேவனின் இந்த கரம், தேவனின் தன்மையின் சொரூபம், பூமியை உருவாக்குவதற்கு முன்பிருந்தே பிதாவிடம் இருந்தவர். அவர் மனிதனை உருவாக்கி, பின்னர் அவர்களின் மீட்பிற்காக இறந்தார். இயேசு கிறிஸ்து தனது சொந்த விலைமதிப்பற்ற இரத்தத்தால் மனித இனத்தை விலை கொடுத்து வாங்கியது மட்டுமல்லாமல், தம்முடைய பிதாவின் மேலான மகிமைக்காக, அவருடைய பூமிக்குரிய இராஜ்யத்தில் அவரின் போதனைகள் மூலம் மனிதனை அவரைப் போலவே மாற்றுவார். (கொலோசேயர் 1: 16,17)

இந்த அற்புதமானவர், ஆயிர வருட ஆட்சியில் தன்னுடைய ஆளுமை செய்யும்படிக்கும், யேகோவா தேவனுடன் இணக்கமாக மனுக்குலத்தை மீட்டெடுக்க உதவுவதற்கும், தம்மைப் பின்பற்றுபவர்களை அழைத்திருக்கிறார். தேவனின் தெய்வீக குடும்பமாக எஞ்சிய நித்தியத்தை தனது தெய்வீக இல்லத்தில் கழிக்கும்படி அவர் நம்மை அழைக்கிறார். அற்புதம் பற்றி பேசுகிறோம். இதை விட அற்புதமானதாக எது இருக்க முடியும்? நம் அழைப்பு மற்றும் தேர்தலை நாம் உறுதி செய்தால், நாம் கண்டுபிடிக்கலாம்! (வெளிப்படுத்தல் 2:17)

### வல்லமையுள்ள தேவன்

# கிறிஸ்துவின் வல்லமை



Michael Costelli

"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன், அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று." (வெளிப்படுத்தல் 18: 1)

கிறிஸ்துமஸ் அட்டைகளில் எழுதப்பட்ட மிகவும் பிரபலமான வசனங்களில் ஒன்று ஏசாயா 9: 6: "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப் பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன் , நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்."

இந்த பகுதியல் கொடுக்கப்பட்டுள்ள "வல்லமையுள்ள தேவன்" என்ற தலைப்பு நம்முடைய பரலோகத் தந்தைக்கு பொருந்தும் என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படலாம், என்றாலும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் இயேசு ஒரு வல்லமையுள்ள தேவன் என்பதை வெளிப்படுத்தும் பல வசனங்கள் வேதத்தில் காண முடிகிறது. "வல்லமையுள்ள தேவன்" என்ற முறையில் நமது கர்த்தரின் பங்கைக் குறித்து பின்வரும் கேள்விகளைக் கேட்டு இப்பாடத்தை தொடங்குறோம்.

(1) நம்முடைய கர்த்தராகிய இயேசு எப்படி வல்லமையுள்ள தேவன்?

(2) அவருடைய வல்லமை எங்கிருந்து வருகிறது?


(3)அவர் அதை அவருடைய இராஜ்யத்தில் எவ்வாறு பயன்படுத்துவார்? அது அவருக்கு என்ன செய்ய உதவுகிறது?

#### வல்லமையுள்ள தேவனாக இயேசு

இயேசுவை ஒரு வல்லமையுள்ள தேவனாக எவ்வாறு கருத முடியும்? பெரிய மனுஷர்களையும் தேவதூதர்களையும் குறிப்பிடுகையில் கூட, "வல்லமையுள்ளவர்" என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்று கன்கார்டன்ஸ் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம். ஆயினும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் ஒரு வல்லவர். அவர் பூமிக்கு வருவதற்கு முன்பு, லோகாஸாக அவர் பயன்படுத்திய வல்லமையையும் (யோவான் 1: 1), அவருடைய பூமிக்குரிய இராஜ்யத்தின் ஆயிரவருட ஆட்சியின் போது அவர் பயன்படுத்த போகும் வல்லமையையும் பார்க்கும்போது இதைக் காண்கிறோம் ரீப்பிரிண்ட் 1410 இல், "தேவன்" என்ற வார்த்தையின் பயன்பாடு குறித்து பின்வரும் கருத்துகளைக் காணலாம்.

"தேவன் என்ற சொல் வல்லமைமிக்க" ஒருவரைக் குறிக்கிறது, ஆனால் எப்போதும் எல்லாம் வல்லவர் என்று அர்த்தப்படாது. எல், எலாஹ், எலோஹிம் மற்றும் அடோனாய் ஆகிய நான்கு எபிரெய சொற்களின் மொழிபெயர்ப்பாக இது பயன்படுத்தப்படுகிறது, இவை அனைத்தும் பொதுவான வேத பதிப்பில், வல்லமையுள்ளவர் அல்லது பெரியவர் என்பவற்றை குறிக்கின்றன. இது ஒரு பொதுவான பெயர், இது நம்முடைய பரலோகத் தந்தைக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கும், தேவதூதர்களுக்கும் மனுஷர்களுக்கும் கூட அடிக்கடி பொருந்தும்.

"உபாகமம் 10: 17ல் எல்லோஹிம் - வல்லமையுள்ளவர் அல்லது பெரியவர் - சர்வவல்லமையுள்ள தேவனாகிய யேகோவா தேவனையும் மற்ற தேவர்களையும் குறிக்க பயன்படுத்தப்படுகிறது. "யேகோவா தேவன் தேவாதி தேவன் ஆவார்". "சங்கீதம் 82 ல் தேவன் என்ற வார்த்தையால் குறிப்பிடப்படுபவர்களின் வேறுபாடு நன்றாக குறிக்கப்பட்டுள்ளது -"தேவ (எல்) சபையில் தேவன் (எல்லோஹிம்) எழுந்தருளியிருக்கிறார்,



தேவர்களின் (எலோஹிம்) நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார்."

இங்கே தேவன் என்ற முதல் சொல் சர்வவல்லமையுள்ள யேகோவா தேவனைக் குறிக்கிறது. மற்றவைகள், இயேசுவை தலையாக கொண்ட வலிமைமிக்கவர்களாகிய சபை, தேவனின் குமாரர்களை குறிக்கின்றன. இவர்களை பற்றி (வசனம்6) "நீங்கள் தேவர்கள் (எலோஹிம்) என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் (எல் யோன், தேவாதி தேவன்) மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன் என்று எழுதப் பட்டிருக்கிறது."

**இயேசுவின் வல்லமையின் ஆதாரம்**

நம்முடைய இரண்டாவது கேள்வி, இயேசுவின் வல்லமை எங்கிருந்து வருகிறது என்பது. அவருடைய வல்லமை பரலோகத்திலுள்ள அவருடைய பிதாவிடமிருந்து பெறப்பட்டது என்று நாம் பதிலளிக்கிறோம். இந்த விஷயத்தில் இயேசு தெளிவாக பேசியுள்ளார். யோவான் 5: 19இல் "அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி - மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார், அவர் எவைகளைச் செய்கிறாரோ அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்."

உயிர்த்தெழுந்த பிறகு, இயேசு தம்முடைய சீஷர்களிடம், "வானத்திலும் பூமியிலும் சகல அதகிாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார். இயேசு தாம் பெற்றிருப்பதைப்பற்றி யோவானுக்கு பத்மு தீவில் வெளிப்படுத்துகிறார், "வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்." (வெளிப்படுத்தல் 5: 12,13)

பூமிக்குரிய இராஜ்யத்தில் இயேசுவின் வல்லமையின் பயன்பாடுகள் இராஜ்யத்தில் அவருடைய அதிகாரத்தைப் பயன்படுத்துதல் மற்றும் அவர் என்ன செய்வார் என்பது பற்றிய மூன்றாவது கேள்வியைப் பற்றி, வேதவசனங்கள் ஞானம், அன்பு, நீதி மற்றும் கருணை ஆகியவற்றின் தோரணத்தை வெளிப்படுத்துகின்றன - அவருடைய பிதாவின் அனைத்து குணமும். ஏசாயா 28:16,17 ல் அவருடைய கருணைமிக்க நீதியான முறையைப் பற்றி வாசிக்கிறோம். "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன், அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான். நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்குநூலுமாக வைப்பேன், பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும், மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டுபோகும்." இராஜ்யத்தில், கர்த்தராகிய இயேசுவும் அவருடைய திருச்சபையும் பிரதிநிதித்துவப்ப டுத்தும் பிதாவின் அசைக்க முடியாத நிலையான கரத்தை முழு மனுக்குலமும் நம்பி இருக்கும்

கூடுதலாக, லூக்கா 2:10 ல் நாம் வாசிப்பது போல, இயேசுவின் அதிகாரம் உலகளாவியதாக இருக்கும். "தேவதூதன் அவர்களை நோக்கி : பயப்படாதிருங்கள், இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். "மேலும், "அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார், அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்" என்று சகரியா (9:10) கூறுகிறார். கர்த்தருடைய அதிகார வரம்பின் அகலம் சங்கீதம் 72:8 ல் கொடுக்கப்பட்டுள்ளது. "ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கிபூமியின்எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்."


இயேசுவின் வல்லமையின் நோக்கம் ஏசாயா 61: 1-5 வில் சொல்லப்பட்டள்ளது: "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார், சிறுமைப் பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர்



என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங் கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழத்தலையும் கூறவும். கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார், அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள். அவர்கள் நெடுங்காலம் பாழாய்க்கிடந்தவைகளைக் கட்டி பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து தலைமுறை தலைமுறையாய் இடிந்து கிடந்த பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள்."

லூக்கா 4:16-21ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி ஆலயத்தில் செய்யப்பட்ட பறைசாற்றுலுடன் இயேசு தனது பூமிக்குரிய ஊழியத்தை தொடங்கினார். ஏசாயா 61: 1, 2 ஐ மேற்கோள் காட்டி அவர் தொடங்கினார். "கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும்" (வசனம் 19) வந்துவிட்டதாகக் கூறி மேற்கோளை முடித்தார், "நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும்" என்ற சொற்றொடரைத் தவிர்த்து விட்டார். சுகமாக்குதலின் நேரம் இப்போது வந்துவிட்டது. இருப்பினும், "நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளிற்கான" நேரம் வரவில்லை, இது இன்னும் 1900 ஆண்டுகளுக்கு இருக்காது.

மனுக்குலத்தை குணப்படுத்தும் இயேசுவின் வல்லமை அவருடைய ஊழியத்தின் போது பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டது. மத்தேயு 8: 5-13ல் பதிவு செய்யப்பட்டுள்ள நூற்றுக்கு அதிபதியின் மிகுந்த விசுவாசத்தின் காரணமாக இயேசு அவரின் பணியாளை குணப்படுத்தினார். பேதுருவின் மாமியாரின் குணப்படுத்துதல் மத்தேயு 8:14,15 ல் காணப்படுகிறது. மேலும் பலரின் குணப்படுத்துதல் 16 வது வசனத்தில் கூறப்பட்டுள்ளது. பிதாவின் ஆவியால் பலப்படுத்தப்பட்ட இயேசு விரைவில் வரவிருக்கும் நற்செய்தியை அறிவித்தார். பெரிய மாற்றங்களைக் குறித்து அவர் பேசியது மாத்திரமல்லாமல், இயேசு தனது வல்லமையை பல்வேறு அற்புதங்கள் மூலம் நிரூபித்தார். தனது



ஊழியத்தின் ஆரம்பத்தில் அவர் உலகின் ஆவி மீதான கட்டுப்பாட்டை வெளிப்படுத்தினார், இது ஆயிர வருட ஆட்சி காலத்தில் சாத்தானைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான ஒரு வல்லமை. மத்தேயு 8:31,32 ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். "அப்பொழுது, பிசாசுகள் - நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும் என்று அவரை வேண்டிக்கொண்டன. அதற்கு அவர் போங்கள் என்றார். அவைகள் புறப்பட்டு, பன்றிக்கூட்டத்தில் போயின. அப்பொழுது, பன்றிக் கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, ஜலத்தில் மாண்டு போயின."

இவை அனைத்தாலும், மத்தேயு12:29இன் பிற்பகுதியில் இயேசு கூறிய வார்த்தைகளின் நிறைவேற்றத்தில் அவரின் வல்லமையை நாம் காண முடிகிறது."அன்றியும் பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்." வெளிப்படுத்தல் 20:2-3இல் இயேசு அளித்த வாக்குறுதியை எதிர்நோக்கியது இது போன்ற பிற நிகழ்வுகளும். "பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைப் போட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாக வேண்டும்."

இயேசுவின் மீட்பு பலியின் மூலம் (1தீமோத்தேயு 2: 6) ஆதாமுக்குப் பதிலாக அவர் மரித்து, தெய்வீக நீதியை திருப்திப்படுத்தி (1கொரிந்தியர் 15:21) பாவம் மற்றும்

மரணத்தின் சாபத்தை நீக்கினார். யவீருவின் மகளை உயிரொடு எழுப்புதலும் (மத்தேயு 9:18,19, 23-26), லாசருவை உயிர்த்தெழுப்புதலும் (யோவான் 11:43,44) இறந்தவர்களை எழுப்புவதற்கான இயேசுவின் வல்லமையின் எடுத்துக்காட்டுகள். அவர்களின் உயிர்த்தெழுதல், உயிர்த்தெழுதலின் மாபெரும் எதிர்கால வேலையை சித்தரிக்கிறது. லாசருவின் சகோதரியான மரியாளுக்கு நித்திய ஜீவனுக்கான வாக்குறுதியை யோவான் 11:25,26ல் இயேசு தெளிவாகக் கூறினார் : "இயேசு அவனை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமா யிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான், உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவ னெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான், இதை விசுவாசிக்கிறாயா என்றார்." இறந்து நான்கு நாட்களுக்குப் பிறகு உங்கள் உடன்பிறப்பு உயிரோடு திரும்புவதன் சந்தோஷத்தை கற்பனை செய்து பாருங்கள்! ஆதாமின் மரணத்தின் உண்மையையும் இயேசு அளித்த ஆசீர்வதிக்கப்பட்ட மாற்று மருந்தையும் அவளும் மற்றவர்களும் கற்றுக்கொண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தனது பூமிக்குரிய ஊழியத்தின் போது யேகோவாவின் பிரதிநிதியாக சாந்தகுணத்தையும், தாழ்மையையும் வெளிப்படுத்தினத்திலும், வேதத்தில் பல இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி வல்லமையும் அதிகாரமுள்ளவராய் இருப்பதிலும், வல்லமையுள்ள தேவனாக இயேசுவின் வல்லமையின் வேறுபாட்டை பார்க்க முடிகிறது. "புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது, இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார், அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்" என்று வெளிப்படுத்தல் 19: 15 ல் நாம் வாசிக்கிறோம். கூடுதலாக ஏசாயா 63: 1ல் "போஸ்றா பட்டணத்திலுமிருந்து சாய்ந்தீர்ந்த வஸ்திரங்களுடையவராக" ஏதோமிடமிருந்து (தேவனின் எதிரிகள்) அவர் திரும்பி வருவதைக் பார்க்கிறோம். அவருடைய ஆடைகள் எதிரிகளின் இரத்தத்தால் சாயமிடப்படுகின்றன (வெளிப்படுத்தல் 19:13, ஏசாயா34: 5, 6) இந்த இரத்த சித்திரம் சுவிசேஷ யுகத்திலிருந்து ஆயிர வருட ஆட்சியில் ஏற்படும் மாற்றங்களை வருணிக்கிறது.

தேசங்களை கவிழ்ப்பது சங்கீதம் 2:9: "இருப்புக் கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப் போல் அவர்களை உடைத்துப் போடுவீர் என்று சொன்னார். "இராஜ்யத்தின் தொடக்கத்தில் இணங்காதவர்கள் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிப்பதிலிருந்து தடுக்கப்படுவார்கள்.

மேசியாவின் இராஜ்யத்தில் அவர்களின் முந்தைய தீய வழிகள் பொறுத்தக் கொள்ளப்படாது, ஏனெனில், என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை," என்று எழுதியிருக்கிறது. இந்த ஆட்சியை குறித்து, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பாவநிவிர்த்தியில் (The Atonement Between God and Man) படித்தோம். (page 239)

"பரிசுத்த ஆவியானவர் அடுத்த யுகத்தில் மனுக்குலத்தின் நல்லிணக்கத்தின் சாட்சி கொடுப்பார், இது முறைமையில் மிகவும் ஒத்ததாக இருக்கிறது. ஆனால் மெய்மைக்கு மிகவும் முரணானதாக உள்ளது. தேவ ஆவியை கொண்டவர் இனி சில சிறப்பு வேலையாட்களாகவும், பணியாட்களாகவும் இருக்க மாட்டார்கள், மாறாக யோயேல் தீர்க்கதரிசி அறிவித்தபடி "மாம்சமான யாவர்மேலும்" ஆவி இருக்கும் (யோயேல் 2:28) "தேவபக்தியுடன் வாழ்பவர் துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடும்" என்பது ஆவியின் "சாட்சியாக" இனி இருக்காது, ஏனெனில் எந்த துன்புறுத்தலும் அனுமதிக்கப்படாது. பலியின் "இடுக்கமான பாதையை" பற்றியும் அது சாட்சி அளிக்காது, ஏனென்றால் பலி செலுத்தும் நாள் கடந்து போனதாக இருக்கும். "அங்கே பெரும் பாதையான வழியும் இருக்கும். அதில் தடுமாறும் கற்கள் இராது (ஏசாயா35: 8, 62:10) "பொல்லாதவர்கள் அறுப்புண்டுபோவார்கள், கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் (அப்போஸ்தலர் 3:23, சங்கீதம் 37: 7-11) என்று சாட்சியளிக்கும். நன்மை செய்வோருக்கு ஆசீர்வாதங்களையும், துணிகரமாக தீமை செய்வோருக்கு தண்டனையையும், அழிவையும் சாட்சியளிக்கும். இது தேவனின் ஒரே ஆவி தான், ஆனால் வெவேறு ஆளுமையின் கீழ்."

ஆயிர வருட ஆட்சியில் ஒரு புதிய அமைதியான சூழல் ஆயிரம் ஆண்டுகள் செயல்படும். ஆயிர வருட ஆட்சியின் இறுதியில் வரும் "கொஞ்சக் காலம்" வரை இவ்வாறு இருக்கும். "எல்லா மனுஷருக்காகவும்" ஏற்படுத்தியுள்ள யுகங்களின் திட்டத்தை அன்பாக நிறைவேற்றுவதற்காக நம்முடைய பரலோகத் தந்தைக்கு எல்லா புகழும் கனமும் உண்டாகுவதாக. ஆமென்.

# ஜீவனைக் கொடுக்கும் ஆவி



Bill Dutka

"பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்"(யோவான் *5:21*)

"நித்தியபிதா" என்பது நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு வழங்கப்பட்ட தலைப்பு. "மனித கிறிஸ்து இயேசுவாக" தம் உயிரை அர்ப்பணிப்பதற்காக நம்முடைய கர்த்தருடைய சுதந்தரத்தை வரையறுக்கும் பல தலைப்புகளுள் இது ஒன்று. அத்தகைய தலைப்பின் தகுதியை யார் மறுப்பார்? இந்த தலைப்பு, இப்போது பயனுள்ளதாக இல்லாவிட்டாலும், தம் இரண்டாம் வருகையில் மனுக்குலத்தை மீட்கும் பணியைத் தொடங்கும் போது செயல்படும் (141-142 (The Atonement Between God and Man))"அவருடைய (கிறிஸ்துவின்) வம்சத்தை யாரால் சொல்லிமுடியும்... அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்." என்று தீர்க்கதரிசி ஏசாயா (*53:8-10*) நமக்கு நினைவூட்டுகிறார். இவ்வாறு, அவர் தனது அர்பணிப்பின் உச்சகட்ட வெகுமதியைப் பெறுவார். ஆதாமின் துணிகரமான பாவத்திற்கான பலியாக அவர் தனது பூமிக்குரிய வாழ்க்கையை வழங்கினார், ஆகவே, முழு மனுகுலத்தையும் "சந்ததியினராக" மீட்டெடுத்தார்.

### உலகின் நித்திய பிதா

ஏசாயா 9:6 ல் உள்ள "நித்திய பிதா" என்ற தலைப்பு, மனுக்குலத்துடன் இயேசு கொண்டிருக்கும் அற்புதமான, மென்மையான, உறவைக் காட்டுகிறது. இந்த உறவு நித்திய ஜீவனுக்காக மனுக்குலத்தை மீட்டெடுக்கும் இருப்பினும், இராஜ்யத்தின் மத்திய கட்டத்தின் விதிகளுக்கு செவிசாய்ப்பவர்கள் மட்டுமே நித்திய ஜீவனைப் பெறுவார்கள். வரவிருக்கும் யுகம் தற்போதைய தீய யுகத்தைப் போலல்லாமல், சாத்தான் முழுமையாகக் கட்டுப்படுத்தப் பதிவிருப்பான், "அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் பாக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைக்கப்படும்" (வெளிப்படுத்தல் *20:3*) இந்த இராஜ்யத்தில்," அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும், அது பரிசுத்த வழி என்னப்படும், தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை, அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை, துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது, மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள், சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் (ஏசாயா 35:8-10) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

மனித குடும்பத்தின் முதல் மனிதனும் தந்தையுமான ஆதாம், கீழ்ப்படியாமையின் மூலம் முழு மனித இனத்தையும் தங்கள் முழங்கால்களுக்கு கொண்டு வந்தார். ஆதாம் தேவனின் கட்டளையை மீறி, தோட்டத்தின் மத்தியில் இருந்த மரத்தின் பழத்தை உண்டார். "தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் - நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம்" (ஆதியாகமம் 3:3) என்று தேவன் இந்த மரத்தை பற்றி கூறியிருக்கிறார். இந்த கனியை உண்டதினால் ஆதாமுக்கு மட்டுமல்ல.

அவருடைய சந்ததியினர், முழு மனுக்குலத்திற்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆதாமின் இந்த துணிகரமான கீழ்ப்படியாமை மனித குடும்பத்தை மரணத்தில் மூழ்கடித்து இறக்கும் செயல்முறையை கொண்டு வந்தது.

அப்போஸ்தலர் பவுல் இவ்வாறு கூறுகிறார்," அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்



படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்." (ரோமர் 5:19) மனித இயேசுவாக தன் ஜீவனை அர்ப்பணித்ததால், உலகின் மீட்பராகவும், ஜீவன் அளிப்பவராகவும், நித்திய பிதாவாகவும் மாறுவதற்கான உரிமையை பெற்றார். இயேசுவின் மூலம் தவிர வேறு எந்த வழியிலும் எவராலும் ஜீவனை பெற முடியாது என்று அப்போஸ்தலர் யோவான் உறுதிப்படுத்துகிறார். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றார். (யோவான் 3:36) சாலொமோன் இராஜாவின் வார்த்தைகளும் நீதிமொழிகளில் நாம் காண்கிறோம்: "எனக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான், என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் என்று சொல்லுகிறது."

**சபையின் நித்திய பிதா?**

சபையின் உறுப்பினர்கள் உலகின் ஒரு பகுதியாக இருந்ததினால், இந்த கேள்வி எழுகிறது, "சுபாவத் தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" (எபேசியர் *2:3*) எனவே இயேசு அவர்களின் நித்திய பிதாவாக கருதப்படுகிறாரா? இல்லை, பரலோக பிதாவே நம்மை அழைத்தார் ! நமது கர்த்தராகிய இயேசு நமக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார், "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்தேயு *6:9,10*) "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான், கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்" (யோவான் *6:44*) என்று இயேசு விளக்குகிறார். பரலோக பிதா தாமாகவே நம்மை அழைத்தார்! நம் அன்பான கர்த்தராகிய இயேசு நமது மூத்த சகோதரர்.

லூக்கா *8:19-21* ல் இயேசு இதை உறுதிப்படுத்தினார். "அப்பொழுது அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் வந்தார்கள், ஜனக் கூட்டத்தினாலே அவரண்டையில் அவர்கள் சேரக்கூடா திருந்தது. அப்பொழுது : உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மைப் பார்க்கவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்று அவருக்கு அறிவித்தார்கள். அதற்கு



அவர் : தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமாயிருக்கிறார்கள் என்றார். "நாம் இயேசுவின் நெருங்கிய, தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தின் ஒரு அங்கமாக இருக்கிறோம் நாம் அவருடைய சகோதர சகோதரிகள் நாம் அவருடைய சகோதரர்கள்.

இயேசு "சகோதரருக்குள்ளே முதற்பேறானவரா யிருந்தாலும், (ரோமர் 8:29), மனுக்குலத்தை உயிர்ப்பிக்கும் மீட்கும் வேலையைத் தொடங்குவதற்காக, தனது மணவாட்டியான திருச்சபையின் நிறைவுக்காக அவர் காத்திருக்கிறார். "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" என்று யோவான் வெளிப்படுத்தல் 22:17 ல் கூறுகிறார். அந்த ஆவி யார்? அது இயேசு, ஏனெனில், "இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது" (வெளிப்படுத்தல் 19:10) சபையின் நிறைவு உலகிற்கு ஒரு பரிசாக இருக்கும். அந்த நேரத்தில், இயேசு தம்முடைய "நித்திய பிதா" என்ற பட்டத்தை எடுத்துக்கொண்டு, ஜீவனுக்கு மீட்கும் வேலையைத் தொடங்குவார்.. எவரெல்லாம் வருகிறார்களோ !

**முற்பிதாக்களின் நித்திய பிதாவா?**

இயேசு இராஜ்யத்தின் மத்தியஸ்த கட்டத்தைத் தொடங்குபோது, பூமியின் இராஜகுமாரர்களாகிய, முற்பிதாக்கள் முதலில் எழுப்பப்படுவர், இவர்கள் பூமியின் ஒழுங்கை சரிசெய்ய உதவுவர் தாவீது இராஜா சங்கீதம் 45:16 ல் அறிவிக்கிறார்,"உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள், அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர். "ஆகவே, நம்முடைய ஆண்டவர், நித்திய பிதா என்ற தலைப்பை எடுத்துக்கொள்ளும்போது, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் விசுவாசத்தின்

அனைத்து கதாநாயகர்கள் மற்றும் கதாநாயகிகள் இனி பிதாக்களாக இருக்க மாட்டார்கள், ஆனால் நித்திய பிதாவின் இயேசுவின் பிள்ளைகளாக இருப்பார்கள். (தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பாவநிவிர்த்தி. (The Atonement Between God and Man)

இராஜ்யத்தின் மத்தியஸ்த கட்டத்தின் தொடக்கத்தில் முற்பிதாக்கள் ஏன் எழுப்பப்படுகின்றார்கள்? அடுத்த யுகத்தின் நீதிபதிகளாகவும் ஆலோசகர்களாகவும் அவர்களின் வேலையை ஏசாயா தீர்க்கதரிசி விவரிக்கிறார். "உன் நியாயாதிபதிகளை முன்னிருந்தது போலவும், உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்ததுபோலவும் திரும்பக் கட்டளையிடுவேன், பின்பு நீ நீதிபுரம் என்றும், சத்தியநகரம் என்றும் பெயர் பெறுவாய்" (ஏசாயா 1:26). இந்த நீதியுரம் எங்கே நிறுவப்படும்? ஏசாயா தீர்க்கதரிசி பதிலளிக்கிறார்,"திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா *2:3*)

மிகுந்த விசுவாசத்தின் எத்துணை பெரிய உவமாணங்கள் இவர்கள் அவர்களின் வாழ்க்கையின் படிப்பினைகள், அவர்களின் விசுவாசம், சபையாகிய நமக்கு ஆதரவாக இருக்கிறது அல்லவா! தானியேலின் தடுமாறா தன்மை, அதேபோன்ற விசுவாசத்தில் நிலைத்திருக்க நம்மைத் தூண்டுகிறது அல்லவா! இந்த மகத்துவமிக்கவர்கள், சோதனையான சூழ்நிலைகளின் கீழ் சோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவர்கள்.

மிகுந்த விசுவாசம் அவர்கள் கொண்டிருந்தாலும் அவர்கள் உயிர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு சபை நிறைவடையும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டும். "கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப் பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப் பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தைகயும் துன்பத்தையும் அநுபவித்தார்கள், உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை, அவர்கள் வனாந்தரங்களி லேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாத படிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" என்று எபிரெயர் 11:37-40 கூறுகிறது. ஆமாம், முற்பிதாக்கள் நிஜமான மோசேயாகிய, கிறிஸ்து தலை மற்றும் சரீரம் நிறைவுபெறும் வரை காத்திருக்க வேண்டும். சபை முடியும் வரை "ஜீவனை கொடுத்தல்" நடக்க முடியாது.



பேதுரு இதை சபைக்கு உறுதிப்படுத்தி கூறுகிறார், "மோசே பிதாக்களை நோக்கி - உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார், அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான்." (அப்போஸ்தலர் 3:22,23) நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் வேறொரு நாமத்தை தேவன் கொடுக்கவில்லை (அப்போஸ்தலர் 4:12) ஆகவே, கிறிஸ்து முற்பிதாக்களுக்கு நித்திய பிதாவாக இருப்பார்.

ஆதாமால் ஒரு முறை இழக்கப்பட்ட பூமி மீதான அதிகாரம், இயேசுவால் நிறைவேற்றப்பட்ட மீட்பின் பணியின் காரணத்தால் நமது உயிர்த்தெழுந்த கர்த்தருக்கு கொடுக்கப்படுகிறது. இயேசு தனது விலைமதிப்பற்ற இரத்தத்தால் இந்த இனத்தை விலைக்கு வாங்கினார். "ஜீவன் அளிப்பவர்" மற்றும் ஆதாமின் முழு இனத்தின் பிதா என்ற அலுவல்களின் தலைப்புகளை நாம் காண்கிறோம். புதிய உடன்படிக்கையின் விதி முறைகளை ஏற்றுக் கொள்பவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவனின் ஆசீர்வாதம் கிடைக்கும். இந்த நிலைப்பாட்டில் இருந்து, "நம்முடைய காத்தராகிய இயேசு எப்படி தாவீதின் வேராக மற்றும் சந்ததியினராக இருக்க முடியும் என்பதையும், தாவீதின் குமாரன் மற்றும் தாவீதின் பிதாவாகவும், தாவீதின் இறைவனாகவும் இருக்க முடியும்" என்பதையும் நாம் காணலாம். சங்கீதக்காரரின் வார்த்தைகளின் பொருள் இப்போது தெளிவாக உள்ளது."உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள், அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர். (சங்கீதம் 45:16)

# அவர் வந்து சமாதானத்தை சுவிஷேசமாக அறிவித்தார்


Tom Gilbert

"அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார், அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்." (சகரியா *9:10*)

வேதாகமத்தில் தேவனுடைய குமாரனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள எல்லா தலைப்புகளிலும், "சமாதானப்பிரபு" என்ற தலைப்பை விட வேறு எதுவும் நாவிற்கும் மனதுக்கும் இனிமையானதாக தோன்ற வில்லை. வாழ்க்கையில், குறைந்தபட்சம் ஏதோ ஆழ்ந்த ஆழ்நிலை மட்டத்திலாவது, அதிக சமாதானத்திற்காக ஏங்காத மனித இருதயமேயில்லை. வேதாகம் தீர்க்கதரிசனமாய் உரைக்கிற சமாதானப் பிரபு என்றழைக்கப்படும் அமைதியால் அடையாளப்படுத்தப் படும் வருங்கால அதிபதியைப் பற்றிய காரியமானது ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகின்றதாயிருக்கிறது.

நம்முடைய கர்த்தரை ஒரு பிரபுவென குறிப்பிட்ட ஒரே தீர்க்கதரிசி ஏசாயா மாத்திரமல்ல. இயேசு உலகத்தில் ஊழியம் செய்து ஆதாமையும் எல்லா மனிதர்களையும் மீட்பதற்காக தனது உயிரைக் கொடுத்த "பிரபுவாகிய மேசியா"வின் காலத்தைச் சுட்டிக்காட்டும் ஒரு காலத்தீர்க்கதரிசனத்தைப் பற்றி தானியேல் (*9:25*) பதிவிட்டிருக்கிறார். புதிய ஏற்பாட்டில், பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் தாங்கள் ஆலயத்தில் போதித்ததற்காக ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக தங்களைத் தற்காத்துக் கொண்டு இவ்வாறு கூறினார்கள், "அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் - மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது. நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரயேலுக்கு



மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்." (அப்போஸ்தலர் *5:29-31*)

### உலக சமாதானத்திற்கான தேவை

சமாதானமானது பொரும்பாலும் மனித இனத்திலிருந்து விலகியே இருக்கிறது. மனித வரலாற்றின் ஆரம்பக் காலங்களிலிருந்து, வெவ்வேறு ஜனத்தொகைகளுக்குள்ளும் அவர்களுக்கு இடையிலும் போர்களும் காட்டு மிராண்டித்தனங்களும் நடந்து வந்துள்ளன. ஜனங்கள் பிரதேசம், நீர், உணவுப் பொருட்கள், இயற்கை வளங்கள் மற்றும் அடிமைத் தனத்திலிருந்து விடுபடுவது போன்றவைகளுக்காகப் போராடியுள்ளனர். இயேசுவின் காலம் வரை அந்த வரலாற்றின் ஒரு பகுதியை வேதாகமமே பதிவு செய்கிறது.

இந்த போர்களில் பல, தேசிய அல்லது இன நலன்களின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டு, தேசபக்தி என்கிற போர்வையில் மறைக்கப்பட்டுள்ளன. ஆயினும்கூட, பெரும்பாலான சுயநலம் மற்றும் ஐசுவரியம் மற்றும் வல்லமைக்கான பேராசை ஆகியவற்றின் அடிப்படையில் துவங்கப்பட்டவைகளாக உள்ளன. இந்த போர்களுடன் இரண்டாம் உலகப்போரின் போது நடந்த படுகொலை போன்ற இனப்படுகொலையின் அத்தியாயங்களும் இணைந்துள்ளன.

கடந்த 3400 ஆண்டு வரலாற்றில் மனிதர்களிடையே 268 ஆண்டுகள் மாத்திரமே முழுமையான சமாதானம் இருந்ததாக கிறிஸ் ஹெட்ஜஸ் கூறுகிறார். {கிறிஸ் ஹெட்ஜஸ் போரைப் பற்றி ஒவ்வொரு நபரும் தெரிந்துகொள்ள வேண்டியது. நியூயார்க் சைமன் & ஸ்கஸ்டர் இன்க் 2003 பக்கம் 1} நாடுகளிடையே இராணுவ மோதல் என்பதுதான் விதி முறை, சமாதானம் என்பது விதி விலக்கு மாத்திரமே.

போர்களில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களது துன்பங்களைவிடவும் இந்த வன்முறை மற்றும் போருடன் தொடர்புடைய மனிதர்களின் துன்பங்களானது மிகவும்

அப்பாற்பட்டவையாக இருந்துள்ளன. போர்கள் குறிப்பாக உணவு மற்றும் ஜீவனுக்கும் ஆரோக்கியத்திற்குமான பிற தேவைகளின் விநியோக சங்கிலிகளைத் தடைசெய்து விடுகின்றன. அவற்றின் விளைவு வீடற்ற நிலைமை, வறுமை மற்றும் பட்டினியால் வாடுதல் ஆகியனவாம்.

மனித தேவைகளுக்கு போதுமான அளவிற்கு வழங்க சமாதானமும் ஒத்துழைப்பும் அவசியமாகிறது. அமைதியும் சுதந்திரமும் ஜனங்கள் தங்களது கல்வியைத் தொடரவும், தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் எற்பாடு செய்யும் முடிவுகளை எடுக்கவும், தங்களின் மனித திறனை நிறைவேற்றவும் உதவுகின்றன.

ஒரு மனிதனாக ஜீவிக்க நமதாண்டவர் பரலோக தேசத்தை விட்டு பூமிக்கு வந்த போது, அவருடைய ஜநநம் மனுஷீகத்திலே சமாதானத்தை உண்டாகும் என்கிற வாக்குத்தத்தத்துடன் அறிவிக்கப்பட்டது. "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக." (லூக்கா *2:14*)

இருப்பினும், மோதல் மற்றம் வன்முறையின் பாங்கானது இன்னும் தொடர்கிறதாயும் மிகவும் திகிலூட்டுகிற தாயும் இருக்கின்றது. கிறிஸ்தவ சபை வரலாறும்கூட குறுக்குவாத / பிரிவினைவாத சண்டை மற்றும் சச்சரவுகளால் சிதைந்தே போயுள்ளன. கிறிஸ்தவர்களுக்கும் பிற மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையே பகையே உள்ளது.

நாடுகளுக்கு இடையிலான போர்கள் துவங்கி உள்நாட்டுப் போர்கள் மற்றும் நாடுகளுக்குள்ளாக நடக்கும் ஆயுத கிளர்ச்சிகளென உலகில் தற்போது 52 ஆயுத மோதல்கள் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. இந்த மோதல்களின் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் மரித்துக்கொண்டே இருக்கிறார்கள், அவர்களில் பலர் பொது மக்களே. 20 ஆம் நூற்றாண்டில் நடந்த போர்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிகை 108 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. மனித வரலாறு முழுவதிலும் போர்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 150 மில்லியனிலிருந்து 1 பில்லியனுக்கும் அதிகமாகும்."


## உலகளாவிய சமாதானத்தைக் கொண்டுவரும் சமாதானபிரபு

நாமமந்தரிப்பிக்கப்பட்டவர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பிறந்தவர் என்பதால், சமாதானப்பிரபு என்கிற நாமத்துக்கு மெய்யான பொருளே தேனும் உள்ளதா ? ஏசாயாவின் தீர்க்கதரிசனமானது (*9:6*) இயேசு உலகளாவிய சமாதானத்தை நிலைநாட்டுவார் என்றே கூறுகிறது. இராஜ்யத்தின் போதான உலகளாவிய சமாதானத்தை ஏற்படுத்துவதில் அவருடன் உடனூழியஞ்செய்ய மனுக்குலத்திலிருந்து 144,000 சமாதானம் பண்ணுபவர்களைப் பயிற்றுவிப்பதற்கும் தகுதியாக்குவதற்கும் இயேசுவின் முதலாம் மற்றும் இரண்டாம் வருகைகளுக்கு இடையிலான காலக்கட்டத்தைத் தேவன் பயன்படுத்தியிருக்கிறார்.

மத்தேயு 5:9 ல் - "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்." என்று இயேசு கூறுகிறார். சமாதானம் பண்ணுகிறவராய் இருப்பதன் அர்த்தங்குறித்து இந்த வசனத்திற்கான செய்தி பொழிப்புரையானது மிகவும் விளக்கமாக கூறுகிறது - "போட்டியிடுவதற்கும் சண்டையிடு வதற்கும் பதிலாக ஒத்துழைப்பது எப்படி என்பதைப் பற்றி ஜனங்களுக்குக் காட்டும் போது நீங்கள் பாக்கியவான் களாயிருப்பீர்கள். அப்போது தான் நீங்கள் உண்மையில் யார் என்பதையும் தேவனுடைய குடும்பத்தில் உங்களது இடமென்ன என்பதையும கண்டறிவீர்கள்."

சமாதானம் பண்ணுகிறவர்களை உள்ளடக்கிய ஆவிக்குரிய குடும்பத்தைத் தேவன் வளர்த்து வருகிறார். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய தலைமையின் கீழாக, அவர்கள் உலகை வன்முறை மற்றும் போர்களிலிருந்து விடுவிக்க உதவுவார்கள். சமாதானம் பண்ணுகிறவர்களின் இந்த குடும்பம் நிறைவாவதற்கும் வெளிப்படுவதற்கும் (அறியாமலேயே) முழு உலகமும் காத்திருப்பதாக அப்போஸ்தலர் பவுல் நமக்குச் சொல்கிறார். இதனால் இந்தச் சுதந்திரத்தை - இந்தச் சமாதானத்தினைக் கொண்டு வருவதற்கான அவர்களின் பணியானது துவங்க முடியும்.





"மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப் பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கை யோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தின வராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது." (ரோமர் 8:19-21)

மனுக்குலத்திற்கான தேவனுடைய திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள இந்த வேலையை வழி நடத்துவதற்காகவே, இயேசு சமாதானப்பிரபு என்று அழைக்கப்படுகிறார். அவர் சமாதானம் பண்ணுகிறவர்களின் பிரபுவுமாவார்.

**சமாதானமென்பது போராட்டமில்லாமை என்பதை விடவும் பெரியது**

யுத்தத்தின் முடிவு மற்றும் மனித போரினை விவரிக்கும் தீர்க்கதரிசனங்களில் ஒன்று மீகா *4:1-4* ல் காணப்படுகிறது- "ஆனாலும், கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடிவருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார், அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள், ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன் தன் திராட்சச் செடியின் நிழலிலும், தன்தன் அத்திர மரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான், சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று."

இந்த வசனப்பகுதியானது போர்களுக்கான மற்றும் போரின் ஆயுதங்களுக்கான முடிவைத் தெளிவாக முன்னறிவிக்கும் அதே வேளையில், கடைசி வசனம் இயேசு ஸ்தாபிக்கவிருக்கும் சமாதானத்தின் மற்றொரு முக்கியமான குணாதிசய அம்சத்தை விவரிக்கிறது. அமைதியான மற்றும் திருப்திகரமான வாழ்க்கையை வாழவும் அனுபவிக்கவும் தேவையானவை அனைத்தும் அனைவருக்கும் கிடைக்கப்பெற்றிருக்கும்.

இதன் முக்கியமான அர்த்தமானது உண்மையில் நமது ஆதார வசனத்தில் சமாதானம் என மொழிபெயர்க்கப்பட்ட ஷாலோம் என்கிற எபிரெய வார்த்தையில் உள்ளது. இயேசு ஷாலோமின் பிரபு, ஷாலோம் என்பது ஒருபோதும் உபத்திரவமில்லாமல் இருப்பதை மாத்திரமே குறிக்கிறது என்பதாகப் புரிந்து கொள்ளக்கூடாது. வாழ்த்துக்காகவோ அல்லது வணக்கமாகவோ பயன்படுத்தப்பட்டாலும், அது எப்போதும் ஒரு நபரின் உன்னத நன்மை மற்றும் நலனுக்கான அனைத்தையுமே குறிக்கிறது. ஏசாயா *9:6* ல் "முழுமையின் பிரபு" என்கிற இயேசுவினது நாமத்தினை வழங்குவதன் மூலம் (யூஜீன் எச். பீட்டர்சன் எழுதிய) செய்தி பொழிப்புரையானது இந்தப் புரிதலைப் பிரதிபலிக்கிறது.

கிறிஸ்துவின் சமாதானமான இராஜ்யத்தில், ஜனங்களை "முழுமையாக்க" தேவையான அனைத்தும் வழங்கப்படும். யாரும் வீடற்றவர்களாக இருக்க மாட்டார்கள். யாரும் பசியோடு இருக்க மாட்டார்கள். குறைபாடுகள் குணமாகும். உடல்ரீதியாகவும், மனரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் - எல்லோரும் ஆரோக்கியமாக இருப்பார்கள். அனைவரும் மதிக்கப்படுவார்கள்.

சமாதானமான இராஜ்யத்தில் பொன்னான பிரமாணம் செயல்படுத்தப்படும். மற்றவர்களின் நன்மைக்காகவும், நலனுக்காகவும் உழைப்பவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். இதுவே செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பற்றிய இயேசுவினுடைய உவமையின் தெளிவான பாடமாகும். (மத்தேயு *25:31-46*)

**நீதியினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சமாதானம்**

தேவனுடைய நியாயப்பிரமாணம் மற்றும்

வார்த்தையைப் பரப்புவதன் விளைவாகவும், ஜனங்களும் தேசங்களுக்கு மிடையே நியாயத்தையும் நீதியையும் கடைப்பிடிப்பதன் விளைவாகவே யுத்தங்களும் போர்களும் முடிவுக்குவருமென மீகாவினுடைய தீர்க்கதரிசனமானது நமக்குக் கூறுகிறது. இந்தப் பணியினை தேவன் சமாதானப்பிரபுவாகிய தம்முடைய குமாரனிடம் ஒப்படைத்துள்ளார் (அப்போஸ்தலர் *17:31*) "கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையா யிருக்கும், அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்." (ஏசாயா 11:3-4) "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது -" இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன், அது பரீட்சிக்கப்பட்டது, விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும், விசுவாசிக்கறவன் பதறான். நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்குநூலுமாக வைப்பேன், பொய் என்னும் அடைக்கலத்தை கல்மழை அழித்துவிடும், மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டுபோகும்." (ஏசாயா 28:16,17) கல்வியின் மூலம் அது ஒவ்வொரு மனித இருதயத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்படும் வரை தேவனுடைய நீதியானதே முதலில் செயல்படுத்தப்படும். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமிலலை, கேடுசெய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா *11:9*)

ஷேன் கிளைபோர்ன் இவ்வாறு எழுதுகிறார் - "சமாதானமென்பது போராட்டங்கள் இல்லாமை மாத்திரமல்ல, இது நீதியின் இருத்தலையும் கூட குறிக்கிறது . .... நீதி, சீர்பொருந்துதல், மன்னிப்பு இருக்கப்பெறும் வரை உண்மையான சமாதானம் இருக்காது. சமாதானம் பண்ணுதல் என்பது செயலற்ற தன்மையைக் குறிக்காது. இது அநீதியை பிரதிபலிக்காமல் அநீதியைத் தடைபண்ணும் செயலாகும், தீமைச் செய்தோரை அழிக்காமல் தீமையை நிராயுதபாணியாக்கும் செயலாகும், சண்டையோ (பறத்தலோக) இல்லாமல், ஒப்புரவாகுதல் மற்றும் நீதியைக் கவனமுடனும், கடினமாகவும் பின்தொடரும் மூன்றாவது வழியைக் கண்டுபிடிக்கும் செயலாகும். இது ஒடுக்கப்பட்டவர்களையும் ஒடுக்கு முறையாளர்களையும் விடுவிக்கும் அளவுக்கு மாபெரும் அன்பின் புரட்சியைப் பற்றியது."

வேதாகமத்திலுள்ள நீதியென்பது சரியான மற்றும் நல்லுறவுகளுடன் தொடர்புடையது. நீதியென்பது ஒரு நிலைமையாகும், இதில் ஜனங்கள் தேவனுடனும் ஒருவருக்கொருவரிடத்தும் ஆரோக்கியமான, போஷாக்கான உறவுகளை வளர்த்துக்கொள்கிறார்கள். ஏதேனும் அந்த உறவுகளை காயப்படுத்தும்போது, நீதியைச் செய்வதென்பது சரியாக அமைப்பதை உள்ளடக்கியிருக்கிறது. நீதி என்பது ஜனங்கள் மற்றும் அவர்களின் உறவுகளுக்கான நேர்மை, முழுமை மற்றும் ஆரோக்கியத்தை மீட்டெடுப்பதை உள்ளடக்கியதாகும்.

நீதி, எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு தொடர்புடைய கருத்தாகும். நீதி என்பது ஜனங்களுக்கு இடையில் அல்லது தேவனுக்கும் அவரது மனித சிருஷ்டிப்புக்கும் இடையில் சரியான அல்லது சமமான ஒரு உறவை விவரிக்கும் போது மட்டுமே அர்த்தமுள்ளதாக இருக்கும். அதற்குப் புலனாகாதவற்றில் எந்த அர்த்தமுமில்லை. எந்தவொரு உறவிலும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கு நியாயமும் நீதியும் அவசியம். வாழ்க்கையின் நல்ல விஷயங்கள் அனைத்திற்கும் அனைவரும் அணுகுவதற்கு நீதியானது ஏற்பாடு செய்கிறது. மற்றவர்களின் இழப்பில், அல்லது மற்றவர்களின் வறுமை மற்றும் தேவையின் வெளிச்சத்தில் கூட யாராலும் நியாயமாக வளர முடியாது.

உண்மையான நீதியை நிறுவுவதன் மூலம் ஒவ்வொரு மனித இருதயத்தையும் குணப்படுத்தி மீட்டெடுப்பதுமே பூமிக்கு நித்திய சமாதானத்தைக் கொடுக்கும்.

"வனாந்தரத்திலே நியாயம் வாசமாயிருக்கும், செழிப்பான வயல்வெளியிலே நீதி தங்கித்தரிக்கும். நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம். என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்." (ஏசாயா 32:16-18)

## அதிகாரிப்புக்கு முடிவில்லை

# தாவீதின் சிங்காசனத்தின் மீது




**Richard Doctor**

"தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்." (ஏசாயா*9:7*)

ஏசாயாவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஆசீர்வதிக்கப்படும் வரை யாக்கோபு தேவதூதருடன் போராடிய அந்த நீண்ட இரவை நாம் திரும்பிப் பார்க்கவேண்டும். யாக்கோபு "இஸ்ரயேல்" என்று பெயர் மாற்றப்பட்டார். இஸ்ரா என்ற எபிரெய சொல்லுக்கு, " வல்லமை கொண்ட பிரபு" என்று பொருள்.

ஏசாயா 9: 6வில் உள்ள "கர்த்தத்துவம்" என்ற வார்த்தையும் அதே எபிரெய வார்த்தையிலிருந்து உருவானது. "வல்லமையுள்ள பிரபு" என்று மேசியாவை நாம் அங்கீகரிக்க வேண்டும், அவருடைய ஜனங்களால் பாராட்டப்படுவதற்கும், கீழ்ப்படிவதற்கும் மரியாதைக்கும் தகுதியான ஒரு பிரபு ஆவார். தேவனுடைய பிரமாணத்தை ஒரு புனிதமான நம்பிக்கையாக வைத்திருக்கும் ஒரு பிரபு, அவர் பணியாற்றும் ஜனங்கள் மீது உண்மையான அன்பு கொண்டவர், அவர்களின் பிரச்சினைகளுக்கு எப்போதும் திறந்திருக்கும் அவருடைய இருதயம் மற்றும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவ அவருடைய விருப்பம். அவர்களின் அழுகைக்கு அவருடைய காது எப்போதும் திறந்திருக்கும்.

மேசியாவின் இராஜ்யம் ஒவ்வொரு வகையிலும் தாவீதின் சிம்மாசனத்திற்கு தகுதியான வாரிசாக இருக்கும். ஏசாயிவின் நாளின் உண்மையுள்ள இஸ்ரயேலர்களால் புரிந்துகொள்ளப்பட்டதை விட இது மிகவும் மகிமைபெற்றதாக இருக்கும். இதை காட்டிலும், மேசியாவின் இராஜ்யம் ஒரு மெல்கிசேதேக்கின் ஆட்சியாக இருக்கும். ஆகையால், இது தாவீதின் சிங்காசனத்தை விட மிக உயர்ந்த ஒழுங்கு முறையாக இருக்கும். இராஜா மற்றும் ஆசாரியர் ஆகிய இரண்டு பொறுப்புகளையும் இணைக்கும் அலுவலகம் இது. தாவீதைப் போன்ற ஒரு இராஜா சமூக பிரச்சனைகளில் கவனம் செலுத்த வேண்டும், அவற்றைத் தீர்க்க இருதயம் இருக்க வேண்டும், அவருடைய ஜனங்களின் பொருள் நலனுக்காக உழைக்க வேண்டும், ஒரு ஆசாரியரின் நோக்கம் நெகேமியா8: 7-8 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு ஜனங்கள் நியாயப்பிரமாணத்தைப் புரிந்துகொள்ள "லேவியர்கள்" உதவினார்கள். ஜனங்கள் தங்கள் இடத்தில் நின்றார்கள். அப்போது அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் புத்தகத்தை தெளிவாகப் படித்து, உணர்வைக் கொடுத்து, வாசிப்பைப் புரிந்துகொள்ளச் செய்தார்கள். இந்த அரசாங்கத்தின் ஆசாரிய அம்சம் (அதிகாரமுள்ள பிரபு) ஜனங்களால் புரிந்துகொள்ளக்கூடிய ஆத்துமாவுக்கான புத்திசாலித்தனமான வழிமுறைகளை வழங்குகிறது. இந்த அறிவுறுத்தல் சட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும், சக குடிமக்களை நடத்தும் வகையையும், ஏழைகள் மற்றும் பலவீனமானவர்கள் வெளிநாட்டினர், கால்நடைகள், பயிர்கள், நில பயன்பாடு, சரியான உணவு, ஓய்வு ஆண்டுகள் மற்றும் யூபிலி மற்றும் உண்மையில் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் விவரிக்கிறது. கூட்டு சமூகத்தை உருவாக்கும் மிதமான மற்றும் மகிழ்ச்சியான விடுமுறை நாட்களைக் குறித்து ஆசாரியர்கள் ஜனங்களுக்கு அறிவுறுத்துகிறார்கள்.



### சோதேமின் பாவங்கள்

இதற்கு மாறாக, சோதோமின் பாவங்கள் - மோசமான அரசாங்கத்தின் பாவங்கள் - எசேக்கியேல் 16:49,50 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. "அவர்கள் தங்களை உயர்த்தி, என் முகத்துக்கு



முன்பாக அருவருப்பானதைச் செய்தார்கள்; அதை நான் கண்டபோது, அவர்களை ஒழித்துவிட்டேன். நீ செய்த பாவங்களில் அரைவாசியும் சமாரியா செய்யவில்லை; நீ உன் சகோதரிகளைப்பார்க்கிலும் உன் பாவங்களைப் பெருகப்பண்ணி, நீ செய்த உன் எல்லா அருவருப்புகளினாலும் அவர்களை நீதியுள்ளவர் களென்று விளங்கப்பண்ணினாய்."

மேசியாவின் நல்லாட்சி, சோதோமின் ஒவ்வொரு பாவத்தையும் செயல் இழக்கச் செய்யும். இது சுய மதிப்புக்குரிய உணர்வை வெளிப்படுத்தும், ஆனால் பெருமைக்கும் ஆணவத்திற்கும் வழிவகுக்காது. நீதியான கோட்பாடுகளுக்கு இசைந்து வருபவர்களுக்கு இராஜ்யம் செழிப்பான ஒரு காலமாக இருக்கும். ஆனாலும் அவர்கள் பெறும் நிறைவு, அவர்களை வீணாக்காது. தூய்மையற்றவைகளையும், கிடைக்கும் நேரங்களை வீணடிக்கும் முயற்சிகளையும் தேடும், மனித நிலை கடந்த கால விஷயங்களாக இருக்கும். ஒரு நல்ல அரசன், தனது பசியுள்ள ஜனங்களுக்கு குறுகிய காலத்தில் உணவு வழங்குவார். மெல்கிசேதேக்கின் முறைமையின் படி வரும் அரசர் இதையும் தாண்டி செல்லுவார். நீண்ட காலமாக ஜனங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான நிலம் மற்றும் விசவசாய சீர்திருத்தங்களில் பணியாற்றுவார். நித்திய நித்தியமாக, "ஏழை எளியோர்களும்" தங்கள் பராமரிப்பில் ஒரு புனிதமான நம்பிக்கையாக நிலங்களை சொந்தமாக வைத்திருப்பார்கள். மேலும் " அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று. "(மீகா4:4) ஏழை எளியோர்கள் "கைகளை பலப்படுத்தும்" தன்னிறைவு பெறுவதற்கான உதவி கிடைக்கும்.

"நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்." (ஏசாயா1:25) "களிம்பு" மொத்த பாவங்களை அடையாளப்படுத்தினாலும், வெள்ளியின் தோற்றத்தை கொண்ட "ஈயம்", தவறான அமைப்புகளின் நம்பிக்கை மற்றும் கிரியைகளை குறிக்கலாம். இருதயத்தில் உள்ள பெருமையை சகமனிதர்களிடம் மறைக்க முடியும், ஆனால் தேவனிடம் மறைக்க முடியாது. விரைவில் அல்லது பின்னர், பெருமை, ஆணவம் அல்லது கர்வத்தை வெளிப்படுத்துவதற்கு வழிநடத்தும். மேசியாவின் இராஜ்யத்தில் அப்படி இருக்காது. மனுஷனுடைய இருதயங்கள் சீர்திருத்தப்படும்போது, ஒவ்வொரு ஒழுக்கக்கேடான மற்றும் அருவருப்பான நடைமுறையும் ஒதுக்கி வைக்கப்பட்டும். நீதியின்படி செயல்படுவதும், மற்றவர்களுக்கு உதவுவதும் அவர்களின் உடல் நலத்தை மேம்படுத்தும் என்பதை அவர்கள் கற்றுக்கொள்வார்கள். சகமனிதர்களுக்கு நன்மை செய்வதால், "அப்பொழுது....விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு (காயங்கள் குணப்பட்டு) சீக்கிரத்தில் துளிர்த்து..." என்று (ஏசாயா 58:8) கூறுகிறது.

**பரிசுத்தம், அன்பு அல்லது படைப்பாற்றல் முடிவடையுமா?**

பூமிக்குரிய அரசாங்கங்களைப் போலவே, கிறிஸ்துவின் இராஜ்யமாகிய தலை மற்றும் சரீரம், பல்வேறு பிரிவுகள் மற்றும் அலுவலகங்கள், இந்த முழு பூமியை நிரப்பும் வரையில் "ஒரு பெரிய பர்வதமாக"(தானியேல் 2:35) அதிகரிக்கும் அல்லது பரவும். முன்னேற்றத்தின் வழியில் எதுவும் இந்த அரசாங்கத்தின் கவனத்திலிருந்து தப்பாது. இது கொழுமையான உணவுகள் நிறைந்த விருந்தை வழங்கும், மேலும் மனிதனின் வழியில் இருக்கும் எல்லா கற்களையும் அகற்றும். எந்தவொரு தீய தாக்கங்களும் அனுமதிக்கப்படாது, தேவனுடைய பரிசுத்த மலையில் ஒருவரும் காயப்படுத்தவோ அழிக்கவோ முடியாது. அரசாங்கத்தின் கண்காணிப்பு, கட்டுப்பாடு, அதிகாரம் மற்றும் அமைதியே, இந்த அரசாங்கத்தின் வெற்றியின் திறவுகோல்களாகும். ஒருவரும் அதன் போதனையிலிருந்து தப்பிக்கவும்

மாட்டார்கள் அல்லது அவரது அயலவருக்கு தீங்கும் விளைவிக்க மாட்டார்கள். இது மனிதனின் சுயாதீனத்தை (இலவச தார்மீகத்தை) மீறாமல் செய்யும்.

அனைத்தையும் ஆளக்கூடிய இந்த இராஜ்யம் எப்போதும் பிதாவின் இராஜ்யமாக இருக்கும். (மத்தேயு13:43,26:29) இருப்பினும், தெய்வீக சுபாவத்திற்கும், அந்தஸ்திற்கும் உயர்த்தப்பட்ட இயேசு மற்றும் அவருடைய மணவாட்டியின் முழு பொறுப்பில் பிதாவாகிய தேவன் பூமியின் ஆதிக்கத்தை ஆயிரம் ஆண்டுகள், ஒப்புக்கொடுத்திருக்கிறார். இவர்கள் தீமையை அழித்து, புதிய உடன்படிக்கையின் இரக்கமுள்ள நிலைகளின் கீழ் பிதாவுடன் முழு இணக்கத்துடன் வரும் அனைவரையும் உயர்த்துவார்கள். புதிய உடன்படிக்கையின் கீழ், கருணையின் விதிகளுடன் கிறிஸ்துவின் மத்தியஸ்த இராஜ்யத்தின் சிறப்பு அம்சங்கள், பாவிகளின் பலவீனங்களுக்கு ஏற்பாடு செய்யும். கிறிஸ்துவின் மணவாட்டியுடன் நெருங்கிய ஐக்கியத்தில் "அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகள்" இருப்பார்கள்.(சங்கீதம் 45:14) வெளிப்படுத்தல் 7: 9ல் உள்ள திரள் கூட்டதார், ஆவிக்குரிய உலகில் , சபையின் திறமையான மற்றும் நேரடியான உதவியாளர்களாக இருப்பார்கள். மேசியாவின் இராஜ்யத்தின் பூமிக்குரிய அமைச்சர்களும் (முற்பிதாக்கள்) "பிரபுக்கள்" என்று அங்கீகரிக்கப் படுவார்கள். இவர்கள் ஜனங்கள் மத்தியில் மேசியாவின் காணக்கூடிய பிரதிநிதிகளாக இருப்பார்கள். (ஏசாயா32:1)

மத்தியஸ்தரின் வழியாக, முற்பிதாக்கள் உட்பட மனுக்குலம் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். ஆயிரம் ஆண்டு ஆட்சி முடிவு பெறும் வரை மனுக்குலத்தின் சீரமைப்பின் வேலைகள் தொடரும். இதற்கு இடையில் தேசங்கள் இருப்பு கோலால், துண்டு துண்டாக நொருக்கப்பட்டு,(சங்கீதம் 2: 8, 9, வெளிப்படுத்துல் 2: 26,27) அனைவரும் விசுவாசத்துடன் மேசியாவின் ஆட்சிக்கு தானாக முன்வருவார்கள். எருசலேமை மையமாகக் கொண்ட மேசியாவின் அன்பான, நீதியான, ஞானமுள்ள ஆட்சியைப் பற்றி ஜனங்கள் கேள்விப்படுகையில், நாடுகள் அவர் அண்டையில் சேர ஆர்வத்துடன் விரும்புவார்கள். (ஏசாயா2:3) " திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

"(சகரியா 8:23) பரிசுத்தமான பெறும்பாதையில் நடக்க விரும்பி, தங்களை உண்மையோடும் பக்தியோடும் அர்ப்பணிப்பக்கும் யூதர்கள் மற்றும் புறஜாதியார்கள் யாவரும் வரவேற்கப்படுவார்கள். இராஜ்யத்தின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியும் அனைவருக்குள்ளும் அந்த பிரமாணம் வளர்ச்சி அடையும், அதேநேரத்தில் கீழ்ப்படியாத மற்றவர்கள் இறுதியில் அழிக்கப்படுவார்கள். (அப்போஸ்தலர் 3:23, வெளிப்படுத்தல் 11:18)

## விருப்பமுள்ளவர்கள் மட்டுமே இராஜ்யத்தை சுதந்தரித்து கொள்வார்கள்

எந்த ஒரு முன்னேற்றத்தையும் செய்ய விரும்பாதவர்களுக்கு ஏற்படும் விளைவுகளை ஏசாயா தீர்க்கதரிசி விவரிக்கிறார் -" அங்கே இனி அற்ப ஆயுசுள்ளபாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோசபிக்கப்படுவான்." (ஏசாயா65:20) இராஜ்யத்தில் நியாயமான மற்றும் நீதியான ஏற்பாடுகளுக்கு வெளிப்புறமான கீழ்ப்படிதலை



காட்டுபவர்கள், ஆயிரவருடத்தின் இறுதி வரை வாழ்ந்தாலும், அந்த வயதில் மரிக்கக்கூடிய அந்த பாவி ஒரு குழந்தையைப் போல் இருப்பான். (அப்போஸ்தலர் 3:23) கண்டிப்பான மத்தியஸ்தரின் பிரமாணங்கள் சமாதானத்தை கொண்டுவரும் - வெற்றி பெற்ற மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட சமாதானமும் கீழ்படிதலும் - நீதியான மற்றும் சமமான அரசாங்கத்தின் நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் வழங்கும். ஆனாலும், இது தேவனுடைய கொள்கைக்கு வெகு தொலைவில் உள்ளது! ஒவ்வொரு நபரும் தெய்வீக தரத்திற்கு தங்கள் முழு விருப்பத்துடன் இணங்க தங்களை அர்ப்பணிப்பதே தேவனுடைய கொள்கையாகும், அதாவது நீதியை நேசித்து, அக்கிரமத்தை வெறுக்கவேண்டும். இறுதியில் இந்த தரநிலை முழு உலகத்திலும் பிரபலமாகி, ஆயிரவருட ஆட்சியில் மனுக்குலத்திற்கு அறிமுகப்படுத்தப்படும். ஆயிரம் ஆண்டு ஆட்சியின் முடிவில் பில்லியன் கணக்கான மனிதர்களிடையே, பரிபூரணமடைவதற்கு முழு வாய்ப்பை அனுபவித்த ஒவ்வொருவருக்கு இடையே பிரிக்கும் , ஒரு "அறுவடை" காலம் இருக்கும் என்பதை வெளிப்படுத்தல் 20: 7-10 காட்டுகிறது. யூத யுகம் மற்றும் சுவிசேஷ யுகத்தின் "அறுவடைகளின்" விளைவாக ஒரு சிறு மந்தை மட்டுமே கூட்டி சேர்க்கப்பட்டு, மனுக்குலத்தின் வெகு ஜனங்களை சாத்தான் ஏமாற்றி கண்மூடித்தனமாக வைத்திருப்பதால், அவர்கள் அபாத்திரர்களாக காணப்படுகிறார்கள். ஆனால் ஆயிரவருட யுகத்தின் அறுவடையின் முடிவுகள் தலைகீழான முடிவுகளைக் காண்பிக்கும் - அதில் வெகு ஜனங்களை அடையாளப்படுத்தும் "செம்மறி ஆடுகள்" நித்திய ஜீவனுக்குள் துரிதப்படுவார்கள், அதேநேரத்தில் சிறுபான்மையினராகிய "வெள்ளாடுகள்" அழிக்கப்படுவார்கள்.

இறுதியில் அது எண்கள் அல்ல, தரத்தின் அடிப்படையில் நடக்கும் தீர்ப்பு, இது தேவனுடைய சோதனை. பாவம் மற்றும் பாவிகள் மற்றும் தீமைக்கு இரங்குபவர்களுக்கு நித்திய ஜீவன் வழங்கப்படமாட்டாது என்பதே தேவனுடைய உத்தரவாதமாகும். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது." (வெளிப்படுத்தல் 21:4)

**தேவனுடைய சித்தம் பூமியின் மேல் செய்யப்படும்**

இவ்வாறாக தேவனுடைய இராஜ்யம் வரும், அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படும். இவ்வாறாக விரோதமான எல்லா அதிகாரத்தையும் வல்லமையும் கீழ்ப்படுத்தி, ஒவ்வொரு முழங்கால்களையும் முடக்கி, பிதாவாகிய தேவனுடைய ஞானம், நீதி அன்பு மற்றும் வல்லமை ஆகியவற்றை ஒவ்வொரு நாவையும் ஒப்புக்கொள்ளும் வரை கிறிஸ்து பிதாவின் "புயமாக" ஆட்சி செய்வார். (ஏசாயா 40:10, 11, 51:5) இறுதியாக, ஆயிரவருட ஆட்சியின் முடிவில் நடந்த முக்கியமான சோதனையில், பாவத்திற்கு இரக்கம் உள்ள அனைவரும் வெளிப்படுகையில், அவர்கள் ஜனங்கள் மத்தியல் இருந்து அழிக்கப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 20:9) அதற்குபின் மேசியா இராஜ்யத்தை பிதாவிடம் ஒப்படைப்பார்.

**இது அவருடைய அரசாங்கத்தின் முடிவாக இருக்காது**

ஆயிரவருட ஆட்சிக்கு மேல், பூமியின் நிர்வாகத்தை வழிநடத்தும் கொள்கைகள் மனிதர்களின் இருதயங்களில் எழுதப்பட்டிருக்கும். இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலை கிறிஸ்துவின் ஆட்சியின் விளைவாக மட்டுமே அடையப்படும். எல்லா மனுஷரும் பரிபூரணமாக இருப்பதோடு, அவர்கள் நீதியின் நன்மையைப் பற்றிய அறிவையும், பாவத்தின் அதிகப்படியான, தீங்கை விளைவிக்கும் தன்மைகளையும் நன்கு புரிந்துகொள்வார்கள். அவர்கள் தங்கள் சோதனையை வெற்றிகரமாக நிறைவேற்றி, தெய்வீக தன்மைக்கு இணக்கமாகவும், இசைவாகவும், முழுமையான குணலட்சனங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நிரூபித்திருப்பார்கள்.

தேவனுடைய இராஜ்யம் இப்போது தேவதூதர்களிடையே பரலோகத்தில் இருப்பது போல அப்போது மனிதர்களிடையே இருக்கும். இந்த அரசாங்கத்தின் அதிகரிப்புக்கு முடிவே இருக்காது. ஒவ்வொரு நல்ல தூண்டுதலும், சேவையும், அழகு, அறிவு மற்றும் பரிசுத்தத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பும் இந்த யுகத்தை குறிக்கும். அபோகாலிப்சின் பயங்கரமான குதிரைகள் போய்விடும். அதற்கு பதிலாக, "அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே "கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று எழுதப்படும்" (சகரியா14:19)

நீதியான ஆளுகை

# என் நீதி வெளிப்படப் போகிறது

"இதோ, ஒரு இராஜா நீதியாக அரசாளுவார், பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம் பண்ணுவார்கள்." (ஏசாயா *32:1*)



***Robert Goodman***

வேதவசனத்தின் ஒரு பகுதியை நாம் ஆராயும் போதெல்லாம், அதன் அர்த்தத்தை சரியாகப் புரிந்துகொள்ள அதைச் சுற்றியுள்ள வசனங்களின் சூழலில் அதனை வடிவமைக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசியானவர் தேவனுடைய திட்டத்தைப் பற்றிய அற்புதமான நுண்ணறிவுகளை இரண்டே வசனங்களில் நமக்கு அளிக்கிறார். இதை வசனங்களைப் பற்றிய நமதாய்வானது. *New International Version*-மொழிபெயர்ப்பைப் பயன்படுத்துகிறது, ஏனென்றால் அது இங்கே எபிரெய வார்த்தைத் துல்லியமாக வழங்குவதாகத் தெரிகிறது.

ஏசாயா 9 ஆம் அதிகாரம் வரவிருக்கும் மேசியாவைக் குறித்ததான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. ஏசாயா ***9: 6*** இவ்வாறு கூறுகிறது, "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். "இயேசுவின் ஜநனத்தைக் கருத்தில் கொள்ளும்போது இந்த வசனத்தை நாம் அடிக்கடி குறிப்பிடுகிறோமல்லவா. இது வரவிருக்கும் மேசியாவைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணி, அவர் நிறைவேற்றப் போகும் பல பாத்திரப்பணிகளைப் பற்றி விவரிக்கிறது.

6 - வது வசனத்தில் உள்ள ஒரு சொற்றொடர் மேசியாவை தேவனுடைய திட்டத்தின் மற்றொரு பரிமாணத்துடன் இணைக்கிறது. இந்தச் சொற்றொடர் இதுவே, "கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்." இந்த திறவுகோலானது 6 மற்றும் 7 ஆம் வசனங்களை இணைக்கிறது. ஏசாயா ***9:7*** இந்த வார்த்தைகளில் கூடுதலான நுண்ணறிவுகளை வழங்குகிறது - "தாவீதின்




சிங்காசனத்தையும் அவனுடைய இராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை, சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்." இந்த வசனத்தின் ஒரு பகுதியில் மாத்திரம் நாம் இங்கே கவனம் செலுத்தப் போகிறோம் - "அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு."

### கர்த்தத்துவம்

"அதை நிலைப்படுத்துதல் மற்றும் நிலைநாட்டுதல்" என்ற சொற்றொடரைப் புரிந்து கொள்ள, முதலில் "அதை" என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். 6 - வது வசனத்தில் உள்ள சொற்றொடருடன், "கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்" மற்றும் 7 -வது வசனத்தில் உள்ள, "அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும்" என்பது, "அது" எதைக் குறிக்கிறது என்பதற்கான தெளிவான யோசனையை நமக்களிக்கிறது - அவருடைய கர்த்தத்துவம். ஏசாயா *9:7*- ஐ மிகக் கவனமாய் ஆராய்ந்தால், இந்தக் கர்த்தத்துவத்தின் தனித்துவமான அம்சங்களை விவரிக்கும் மூன்று வார்த்தைகள் வெளிப்படுகின்றன.

மேசியாவினுடைய ஆளுகையின் முதலாம் அம்சம் "கர்த்தத்துவம்" என்கிற சொல்லாகும். ஸ்ட்ராங்கினுடைய

ஒத்திசைவின்படி, "கர்த்தத்துவம்" என்ற சொல்லானது ஆளுகை, ஆதிக்கம் அல்லது அரசாங்கம் என்று பொருள்படும் மிஸ்ரா என்ற எபிரெய வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த எபிரெய வார்த்தையானது ஏசாயா *9:6* மற்றும் *9:7* ஆகிய இரண்டு இடங்களில் மாத்திரமே காணப்படுகிறது. தெய்வீகமாக அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கர்த்தத்துவம் மனிதர்களால் நிறுவப்பட்ட எந்தவொரு அரசாங்கத்திலிருந்தும் தனித்துவமானதும் வித்தியாசமானதும் என வேறுபடுத்துவதற்கு ஏசாயா இந்தக குறிப்பிட்ட வார்த்தையைப் பயன்படுத்துகிறார் என்று நாங்கள் நினைக்கிறோம்.

அமெரிக்க அரசாங்கததை விவரிக்கும்படி கேட்டால், நமது பதில் பின்வருமாறு இருக்கும் - "கூட்டரசு என்பது மூன்று கிளைகளாலான அரசியலமைப்பு குடியாசு ஆகும் - அவை நிர்வாக, சட்டமன்ற மற்றும் நீதித்துறை என்பதை மூன்று கிளைகளாலான அரசியலமைப்பு குடியரசு ஆகும் - அவை நிர்வாக, சட்டமன்ற மற்றும் நீதித்துறை என்பவைகளாகும். இதற்கு 50 மாநிலங்கள் மீதும் அமெரிக்க பிரதேசங்கள் மீதும் அதிகாரமுள்ளது. அரசாங்கத்தின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கும் நடை முறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கும், நிர்வாகத் துறைகள் அரசாங்கத்தின் ஒவ்வொரு கிளையிலும் இருக்கின்றது." இந்த வரையறை ஒரு செயல்பாட்டு அரசாங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் கட்டமைப்பை விவரிக்கிறது. அதேபோல், ஏசாயா *9:7*- ல் குறிப்பிடப்பட்டுள்ள "கர்த்தத்துவமும்" தேவனுடைய புதிய முறைமையின் கட்டமைப்பையும் செயல்பாடுகளையும் குறிக்கிறது.

**சிங்காசனம்**

மேசியாவினுடைய ஆளுகையின் இரண்டாவது அம்சம் "சிங்காசனம்" ஆகும். ஸ்ட்ராங்கினுடைய ஒத்திரைவின்படி, "சிங்காசனம்" என மொழிபெயர்க்கப் பட்ட எபிரெய சொல் கனத்திற்குரிய இருக்கை எனப் பொருள்படும் கிஸே ஆகும். இந்த வார்த்தை பொதுவாக பழைய ஏற்பாட்டில் ஓர் அதிபதிக்கு அதிகார இடத்தை நியமிக்க பயன்படுத்தப்படுகிறது. இது ஓர் அரசாங்கத்தின் அதிகாரத்தையும் நீதியையும் குறிக்கிறது. வெளிப்படுத்தலில், "சிங்காசனம்" என்ற சொல் 39 முறை காணப்படுகிறது, இது தேவனுடைய அதிகாரம் வல்லமை மற்றும் நீதி ஆகியவற்றின் அடையாளமாகும். அதேபோல் ஏசாயா *9:7*ல் உள்ள சிங்காசனமானது இந்தப் புதிய அரசாங்கத்தின் அதிகாரம், வல்லமை மற்றும் நீதியைக் குறிக்கிறது.

**இராஜ்யம்**

மேசியாவினுடைய ஆளுகையின் மூன்றாவது அம்சம் "இராஜ்யம்" ஆகும். ஸ்ட்ராங்கின் கூற்றுப்படி, "இராஜ்யம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய சொல் சாம்ராஜ்யம் எனப் பொருள்படும் மம்லாக்க (*mamlaka*) ஆகும். ஓர் அதிபதி ஆளுவதற்காக நிலம் அல்லது ஜனங்களை நியமிக்க இந்த வார்த்தை பொதுவாக வேதாகமத்தில் பயன்படுத்தப்படுகிறது. தேவனுடைய தெய்வீக ஏற்பாடு ஒரு முழுமையான அரசாங்கத்தின் மூன்று அம்சங்களையும் கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்த ஏசாயா கர்த்தத்தவம், சிங்காசனம் மற்றும் இராஜ்யம் ஆகிய சொற்களைப் பயன்படுத்துகிறார்.

ஏசாயா *9:7* ல் தீர்க்கதரிசி இந்த கர்த்தத்துவத்தின் மற்றொரு சிறப்பியல்புகளை வெளிப்படுத்த, "அதை நிலைப்படுத்துதல் மற்றும் நிலைநாட்டுதல்" என்கிற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். "நிலைப்படுத்துதல்" என்பதற்கான எபிரெய சொல் குன் (*kun*) அதாவது அமைப்பது என்பது பொருளாகும். இந்தப் புதிய அரசாங்கத்தினுடைய நிறுவனத்தின் துவக்கப் புள்ளியை இது குறிக்கிறது. "நிலைநாட்டுதல்" என மொழிபெயர்க்கப்படட சொல் சாத் (*saad*) அதின் பொருள் நிலையாயிருத்தலாகும். இந்த அரசாங்கம் என்றென்றைக்கும் நடைபெறும் என்கிற உண்மையை இது விளக்குகிறது. அதிகாரத்தைப் பெறுவதற்கும் பின்னர் அதைப் பிடித்துக் கொள்வதற்கும் மனிதர்கள் சரித்திரம் முழுவதும் போராடியுள்ளனர். ஆளுகைக்கான போராட்டம் என்பது வரலாற்றுப்பலகையில் முழுவதும் வரையப்படத்தின் கருப்பொருளாக இருக்கிறது. ஆனால் ஏசாயா *9:6-7*ல் விவரிக்கப்பட்டுள்ள கர்த்தத்துவமானது மிகவும் வித்தியாசமானது. இதற்கு முன் வந்த எந்தப் பூமிக்குரிய அரசாங்கத்தைப் போலல்லாமல், இது தெய்வீகமாக கட்டமைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒன்றாக இருக்கும்.

**கால அளவு**

ஏசாயா, "என்றென்றைக்கும்" என்ற

வார்த்தையைச் சேர்க்கிறது. இது மேசியாவினுடைய கர்த்தத்துவத்தின் காலத்தை இரணடு எபிரெய வார்த்தைகளில் விவரிக்கிறது - "என்றும்" மற்றும் "என்றைக்கும்". "என்றும்" என மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையின் அர்த்தம் "இதுவரை" "என்றைக்கும்" என மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையின் அர்த்தம் "மறைபுள்ளி" (*vanishing-point*) ஆகும். ஆகவே, இந்த இரண்டு சொற்களும் ஒன்றிணைந்து, மறைபுள்ளிவரை (அடிவானத்தை அடையும் சாலையாக, விண்வெளியில் அல்லது நேரத்திலுள்ள தொலைவு) என்கிற அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றன. ஏசாயா*9:7* மேலும் இவ்வாறு கூறுகிறார். "அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை." இந்தத் தெய்வீக கர்த்தத்துவத்திற்கு ஒரு ஆரம்பம் இருக்கும், ஆனால் முடிவே இருக்காது *!*சமாதானம், ஸ்திரத்தன்மை மற்றும் மகிழ்ச்சியை வழங்கும் ஓர் அரசாங்கத்தை உருவாக்கு வதற்கான மனிதனின் பயனற்ற முயற்சிகளின் முடிவை இது குறிக்கும்.

**பண்புக்கூறுகள்**

இந்தப் புதிய உலகத்தின் ஒழுங்குமுறையானது தேவனுடைய பண்புகளின் அடிப்படையில் நிறுவப்படும். மனிதனுக்கான தேவ அன்பின் காரணமாக, மனிதன் தனது பாவ - நோய்வாய்ப்பட்ட மற்றும் மரிக்கும் நிலையிலிருந்து வெளியேறுவதற்கான வழியை வடிவமைக்க அவரை உந்தியது. அனுபவத்தின் மூலம் கீழ்ப்படியாமைக்கான விலையை மனுக்குலம் சிறப்பாகக் கற்றுக் கொள்ளும் என்பதை தேவனுடைய ஞானம் அறிந்திருந்தது. தேவனுடைய நீதி ஆதாமின் பாவத்திற்கு ஈடு இணையான விலையைக் கோரியது. மரித்தவர்களை எழுப்பவும், மீட்டெடுக்கப்பட்ட பூமியில் மனிதன் நீதியைக் கற்றுக்கொள்ள சிறந்த நிலைமைகளை ஏற்பாடு செய்ய தேவனுடைய வல்லமையானது அவசியமாக இருக்கிறது.

வரவிருக்கும் யுகங்களுக்குச் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் உறுதி செய்வதற்காக, நியாயம் மற்றும் நீதியின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஒரு கர்த்தத்துவத்தைத் தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். இவையல்லாமல், தராசு சமநிலையில் இருக்காது, சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் அடையவோ நிலைநிறுத்தவோ முடியாது. ஒரு அரசாங்கம் நியாயமில்லாமல் நீதியாக இருக்க முடியாது. நீதியற்ற அரசாங்கத்தால் நெடுநாள் நிலைநிற்க முடியாது. இந்த இரண்டு பண்புகளுமே ஒரு நித்திய அரசாங்கத்திற்கு இன்றியமையாதவைகளாகும்.

**ஒன்று**

இந்தத் தெய்வீக ஏற்பாட்டின் மற்றொரு முக்கிய அம்சம் "ஒரே" கர்த்தத்துவமென்னும் கருத்தாகும். இன்றைய உலகில், போட்டியிடும் மதங்களும் அரசாங்கங்களும் தொடர்ச்சியான மோதல்களுக்கும் உறுதியற்ற தன்மைக்கும் காரணமாக இருக்கின்றன. ஏசாயா "கர்த்தத்துவம்" மற்றும் "அவருடைய கர்த்தத்துவம்" என்ற சொற்களைப் பயன்படுத்தும்போது, பூமியெங்கும் ஆட்சிசெய்ய ஒரே ஒரு கர்த்தத்துவம் மட்டுமே இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறார் - அது மேசியாவின் கர்த்தத்துவம், அதன் கட்டமைப்பு தேவனால் நியமிக்கப்பட்டவையாக இருக்கும்.

ஏசாயா *9:7*ஆம் வசனமானது தேவனுடைய வரவிருக்கும் தெய்வீக கர்த்தத்துவத்தைப் பற்றி அதிகமாக வெளிப்படுத்துகிறது. இது தேவனுடைய அன்பு, ஞானம், நீதி மற்றும் வல்லமை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் நிறுவப்படும். இது அனைவருக்குமான நியாயம் மற்றும் நீதியினால் இயக்கப்படும். தேவனுடைய சிருஷ்டிப்பில் அனைத்திற்கும் சமாதானம், செழிப்பு மற்றும் மகிழ்ச்சியை உறுதிப்படுத்த இது கட்டமைப்பு, அதிகாரம் மற்றும் கால அளவை ஏற்பாடு செய்யும். எல்லா மனிதர்களும் தங்கள் தேவனை அறிந்து மதித்து உணரகற்றுக்கொள்ள இது நிலைத்தன்மையையும் தொடர்ச்சியையும் வழங்கும். அது என்றென்றும் நீடித்திருக்கும்.

தேவனே இதைச் சொன்னார், அது நிறைவேறும். "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக." (மத்தேயு *6:10*) லூக்கா *1:32,33* இவ்வாறாக கூறுகிறது. "அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார், கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார், அவருடைய இராஜ்யத்துக்கு முடிவிராது." ஆமென்.

## சேனைகளின் கர்த்தரின் வைராக்கியம்

# நாம் உம்மை நியமிக்கிறேன்



*Ernie Kuenzli*

"இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்." (ஏசாயா*42:1*)

"தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்." (ஏசாயா 9:7) என்ற வாக்கியத்துடன் 9 ஆம் அதிகாரத்தில் மேசியாவைப் பற்றிய ஏசாயாவின் தீர்க்கதரிசனம் முடிவடைகிறது. மேசியா மற்றும் அவருடைய இராஜ்யத்தின் முழு வாக்குத்தத்தமும் தேவனுடைய வைராக்கியத்தின் அஸ்திவாரத்தையே சார்ந்துள்ளது. மனுகுலத்திற்கான இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தேவனின் உறுதிப்பாட்டை இது நமக்கு வெளிப்படுத்துகிறது.

நம்முடைய ஆதி பெற்றோரின் கீழ்ப்படியாமைக்கான தண்டனை அறிவிக்கப்பட்டபோது, இந்த அர்ப்பணிப்பு முதலில் குறிப்பிடப்பட்டது. ஆதாம் மற்றும் ஏவாளுக்கு மரண தீர்ப்பை கொடுப்பதற்கு முன்பே, தேவன் சர்ப்பத்திடம் சொன்ன வாக்கியத்தில் அவர் இரட்சிப்பை வாக்களித்தார். "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்." (ஆதியாகமம் 3:15) இந்த தெளிவற்ற தீர்க்கதரிசனத்தில், "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு " ஒரு குழந்தை பிறப்பார் என்று தேவன் உறுதியளித்தார். (எபிரெயர் 2:9)

### உறுதிமொழியுடன் உறுதிப்படுத்தப்பட்டது

மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக அவருடைய அர்ப்பணிப்பின் மேல் நம்முடைய நம்பிக்கை பலப்படுவதற்கு தேவன் ஆபிரகாமிடம் ஒரு வாக்குத்தத்தத்தின் மூலமாக உறுதிப்படுத்தினார். "நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். " (ஆதியாகமம் 22:16-18) அனைவருக்கும் மீட்கும் பொருளாக தன்னையே கொடுக்கக்கூடிய தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய கிறிஸ்து இயேசுவை ஈசாக்கு சித்தரிக்கிறார். (1தீமோத்தேயு2:5,6)

1பேதுரு1:18-20 ல் பேதுரு எழுதுவது போல, தேவனுடைய வைராக்கியமும், மனிதனுடைய இரட்சிப்புக்கான அர்ப்பணிப்பும், சிருஷ்டிப்புக்கு முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது:"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்





காகவே அவரை அனுப்பினார்." (யோவான் 3:16,17)

மனிதனுடைய கீழ்ப்படியாமையையும், அது பரலோகத் தகப்பனுக்கு எந்த அளவுக்கு விசனமாக இருந்தது என்றும் ஏசாயா தீர்க்கதரிசி விவரிக்கிறார். (ஏசாயா59:14,15) மிகுதியாக அதிகரிக்கும் பாவ நிலையை, மனுக்குலத்திற்கு கற்பிக்க, தேவன் ஒரு குறுதிய காலத்தை அனுமதித்தார். ஆனால் தேவையான படிப்பினைகள் வழங்கப்பட்டவுடன் இந்த கிளர்ச்சியைத் தீர்க்க அவரது வைராக்கியம் அவரை உந்துகிறது.

**இயேசு நியமிக்கப்பட்டார்**

இந்த உலகை தன்னோடு ஒப்புரவாக்குவதற்கு, அவருடைய மிக விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய அவருடைய ஒரே பேறான குமாரனையே வழங்குவதற்கு தேவனுடைய அன்பு அவரது வைராக்கியத்தை தூண்டியது. தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய லோகாஸ் மரணத்தை அனுபவிக்கும்படியாக, தேவதூதர்களை விட தாழ்த்துவதற்கு தேவனுக்கு மட்டுமே வல்லமை இருந்தது. (எபிரெயர் 2:9)

"ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்; ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது. அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து, இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்து, நீதிசரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்து, வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக்கொண்டார்." (ஏசாயா59:16,17) என்று ஏசாயா எழுதினார். நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய ஊழிய காலத்தில், தேவனுடைய சித்தத்தை ஆர்வத்துடன் செய்வதற்கு, தேவனுடைய வைராக்கியமே அவருடைய கவசமாகவும், அங்கியாகவும் இருந்தது. இயேசு சொந்தமான எதையும் பேசவும் இல்லை, செய்யவும் இல்லை. " நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது." (யோவான் 5:30) என்ற அவர் கூறினார். மேலும், " ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்." (யோவான் 8:28)என்றும் கூறினார்.

தேவனுடைய வைராக்கியம் அதோடு முடிவடையவில்லை. ஒரு முறை இயேசு, "தன்னை பூரணராக நிரூபித்த" பின், (எபிரெயர் 5:9) " ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." (பிலிப்பியர் 2:9-11) இயேசு ஜீவனை கொடுக்கும் ஒரு ஜீவியாக அல்லது இரண்டாம் ஆதாம் என்று 1கொரிந்தியர் 15:45ல் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய படி, இயேசுவை மாபெறும் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக தேவன் அவரை உயர்த்தினார்.

**ஒரு ஆசாரியத்துவம்**

மனுக்குலத்திற்கு ஜீவனை கொடுக்கும் ஒரு சிறந்த ஆவிக்குரிய ஆசாரியராக நம்முடைய ஆண்டவரை உருவாக்கவேண்டும் என்ற அவருடைய இரண்டாவது சபதத்தில் தேவனுடைய வைராக்கியம் மேலும் வெளிப்படுத்தப்பட்டது. " அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராயிருக்கிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார். அப்படியே வேறொரு இடத்திலும்: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லியிருக்கிறார். தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை

நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்; நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்." (எபிரெயர் 5:5,6,சங்கீதம் 2:7, 110:4) என்று பழைய ஏற்பாட்டில் இருந்து மேற்கோள் காட்டி, அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார்.

மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தபோது, ஆபிரகாமுக்கு வாக்குறுதியளித்த ஆசீர்வாதங்களை உண்மையாக்கிய, இந்த உயர்ந்த ஆவிக்குரிய பிரதான ஆசாரியர் நம்முடைய உயிர்த்தெழுந்த ஆண்டவரைக் சித்தரித்தார்.

இயேசு தாம் பெறபோகும் வெகுமதியை மரித்தோரின் உயிர்த்தெழுதலுடன் இணைத்தார். "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." (யோவான் 5:25-29)

ஒரு உடன்படிக்கை மற்றும் ஒரு ஒளி கொடுக்கப்பட்டது

"நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும், இருளில் இருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும், கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்."(ஏசாயா42:6,7) என்று தேவன் ஏசாயாவின் மூலம் கூறினார்.

தேவனுடைய வைராக்கியம் நம்முடைய ஆண்டவரை நீதிக்குள் அழைத்தது, அவருடைய பூமிக்குரிய ஊழிய காலத்தில் அவரைக் கவனித்தது, பின்னர்அவரை ஒரு சிறந்த ஆவிக்குரிய ஆசாரியராகவும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் உருவாக்கியது. இதனால் தேவன் ஆபிராகமுடன் செய்த பெரிய உடன்படிக்கையை நிறைவேற்றினார்.

ஆபிரகாமின் உடன்படிக்கை

# இன்றைய தீர்க்கதரிசனம்

"இஸ்மயேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பததைக் கேட்டேன், நான் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன், அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான், அவனைப் பெரிய ஜாதியாக்குவேன். வருகிற வருஷத்தில் குறித்தகாலத்திலே சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்றார்." (ஆதியாகமம் 17: 20, 21)

*Ernie Kuenzli*

ஆகஸ்ட 13,2020 அன்று, ஜனாதிபதி டிரம்ப் "இஸ்ரயேல்ல் - ஐக்கிய அரபு நாடுகள்" சமாதான ஒப்பந்தத்தை அறிவித்தார், அதன் கீழ் அந்த நாடுகளின் அரசியல் உறவுகள் சீராகும். இதை தொடர்ந்து செப்டம்பர் 11ம் தேதி பஹ்ரேய்னும் இஸ்ரயேலும் இதேபோல் அரசியல் உறவுகளை ஏற்படுத்த ஒப்புக் கொண்டதாக ஒரு அறிவிப்பு வெளியானது.

இதுபோன்ற முன்னேற்றங்கள் அனைத்தும் நம் கவனத்தை ஈர்க்கின்றன, ஏனென்றால் கிறிஸ்துவின் இராஜ்யம் இஸ்ரயேலில் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் பின்னர் பரவும், ஒரு காரியம் நமக்கு இடைசிறுத்தத்தை அளித்தது, அதாவது யோர்தான் ஆற்றின் சர்ச்சைக்குரிய மேற்குக் கரையை அணைப்பதற்கான எல்லா திட்டத்தையும் இஸ்ரயேல் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது. வேதத்தில் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட நிலபரப்பு இந்த நிலங்களையும் உள்ளடக்கியது. இருப்பினும், இஸ்ரயேலின் பிரதமர் நெட்டனியாஹு இந்த விஷயத்தை நிறுத்திவைக்க வில்லை, தாமதம் செய்திருப்பதாக தெளிவுபடுததினார்.

**ஐக்கிய அரபு நாடுகள்**

இந்த நாடு கிழக்கு அரேபிய தீபகற்பத்தில், பாரசீக வளைகுடாவின் மேற்குப் பகுதியில் உள்ளது. வளைகுடாவினுள் நீண்டு அங்கு அது மறுபுறத்திலிருக்கும் ஈரானில் இருந்து சுமார் 40 மைல் தொலைவில் குருகலாகிறது. இது **50 x 50** மைல்களுக்கு சமமான பரப்பளவுக்கு குறைவாக உள்ளது (மற்றும் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டுள்ளது).

இந்த நாடு ஏழு "எமிரேட்ஸ்"களை உள்ளடக்கியது. ஒவ்வொன்றும் ஒரு அமீர் அல்லது உள்ளூர் ஆட்சியாளரின் அதிகாரத்தின் கீழ் உள்ளது.

இந்த நாடு 5000 அமெரிக்க இராணுவ வீரர்களை த.்.ப்ராவில் **(Dhafra)** ஒரு விமான தளத்திலும், புஜைராவில் (Fujairah) ஒரு சிறிய கடற்படை தளத்திலும் கொண்டுள்ளது. பிரான்சின் ஒரு கடற்படை தளமும் அபுதாபியில் உள்ளது.

**பஹ்ரேய்ன்**

"பஹ்ரேய்ன் இராஜ்யம்" என்பது பாரசீக வளைகுடாவில் உள்ள ஒரு தீவு மாநிலமாகும், இது சவூதி அரேபியாவின் கிழக்கு கடற்கரையிலிருந்து 15 மைல் தொலைவில் உள்ளது. தீவின் அளவு 50 சதுர மைல்களுக்கும் குறைவானது, இதனால் ஒப்பீட்டளவில் சிறியதாக இருக்கும் ஐக்கிய அரபு எமிரெட்ஸை விட பல மடங்கு சிறியது. எவ்வாறாயினும், இரு மாநிலங்களும், மிகப் பெரிய நாடாகிய சவுதி அரேபியாவின் செல்வாக்கின் எல்லைக்குள் இருப்பதால், இஸ்ரயேலுடனான அவர்களின் ஒப்பந்தங்கள் அவற்றின் பெரிய அண்டை நாடுகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையைக் குறிக்கின்றன.

சவுதி அரேபியா ஒரு சுன்னி முஸ்லீம் நாடு, அதே நேரத்தில் அவர்களின் முக்கிய எதிரியான ஈரான் ஒரு ஷியைட் முஸ்லீம் நாடு மற்றும் இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் முரண்படுகிறது. இது யெமனில் ஏற்பட்ட மோதலில் வெளிப்படுகிறது - ஒரு பக்கம் சுன்னி சவுதி அரேபியாவுடன் கூட்டணி வைத்திருந்தது. மற்றொரு பக்கம் ஷியைட் ஈரானுடன் கூட்டணி வைத்திருந்தது.

அண்டை நாடுகளுடன் சமாதானத்தை விரும்பும் இஸ்ரயேலைப் பற்றி சவுதி அரேபியாவுக்கு முறையான கவலை ஏதும் இல்லை. ஆனால் ஷியைட்டின் செல்வாக்கு மற்றும் ஊக்கமாக இருக்கும் ஈரானை குறித்து அவர்களுக்கு கவலைகள் உள்ளன. இது இயற்கையாகவே



இஸ்ரயேலுடனான ஒரு கூட்டுறவு மனப்பான்மைக்குத் சவூதி அரேபியாவை தள்ளுகிறது. இந்த விஷயத்தில் இஸ்ரயேலுக்கும் சவுதி அரேபியாவின் நட்பு நாடுகளான **(UAE)** மற்றும் பஹ்ரெய்னுக்கும் இடையிலான நல்லிணக்கத்தால் இது வெளிப்படுத்தப்படுகிறது.

**அரபு பன்முகத்தன்மை**

அரபு பன்முகத்தன்மை பின்னணியிலிருந்து வந்தவர்கள். சிலர் ஆகாரல் ஏற்பட்ட ஆபிரகாமின் சந்ததியினர், சிலர் கேத்துராளிடத்திலிருந்து வந்தவர்கள், மற்றவர்கள் லோத்தின் குமாரர்களாகிய அம்மோன் அல்லது மோவாபினிடத்திலிருந்து வந்தவர்கள். சிலர் பிற செமிடிக் பின்னணியைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். எகிப்திய வம்சாவளி காமிலிருந்து வந்தது. ஆனால் நாட்டின் அதகாரப்பூர்வ பெயர் எகிப்து அரபு குடியரசு என்பதே.

அரபினர்களில் பெரும்பாலானவற்றை ஒன்றிணைக்கும் ஒன்று அவர்களின் இஸ்லாமிய நம்பிக்கை. கிறிஸ்தவர்களையும் இஸ்ரயேலர்களையும் போலவே எல்லா முஸ்லிம்களும் அபிரகாமை ஒரு தெய்வீக மனிதராக மதிக்கிறார்கள். ஆகவே, "அபிரகமாம் உடன்படிக்கைகள்" என்ற சொற்றொடர் சமீபத்திய ஒப்பந்தங்களைக் குறிப்பிடுவதற்கும் இனிமையானதாக இருக்கிறது. இது அரேபியர்களுக்கும் இஸ்ரயேலியர்களுக்கும் இடையில் இருக்கும் உள்ளார்ந்த கலாச்சார தொடர்பை வெளிப்படுத்துகிறது. மேலும் ஆபிரகாமின் பெயரை பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு வருகிறது. தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த உடன்படிக்கை வரவிருக்கும் காலத்தில் உலகை ஆசீர்வாதங்களால் நிரப்பும். ஆபிரகாம் என்ற பெயர் பொது விழிப்புணர்வுடன் ஒன்றிணைவது எவ்வளவு அற்புதமானது. "ஆபிரகாம் உடன்படிக்கைகள்" என்ற சொற்றொடர், இராஜ்யத்திற்காக ஏங்குகிற சகோதரர்களின் இதயத்திற்குள் இருக்கும் அதிர்வுறும் ஆழமான ஒன்றைக் கிளப்புகிறது.

வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை கொண்டு வர தகுதியுள்ள ஆபிரகாமின் வித்து யார் என்ற கருத்து தான் கிறிஸ்தவர்களையும் இஸ்ரயேலியர்களையும் முஸ்லிம்களையும் பிரிக்கும் காரணியாக இருக்கிறது. வாக்களிக்கப்பட்ட வித்து ஈசாக்கு என்பது -யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட்ட சேஷ்ட புத்திரபாகத்தை ஈசாக்கிடமிருந்து பெற்றார் என்பது, இஸ்லிம்களையும்



பிரிக்கும் காரணியாக இருக்கிறது. வாக்களிக்கப்பட்ட வித்து ஈசாக்கு என்பது - யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட்ட சேஷ்ட புத்திரபாகத்தை ஈசாக்கிடமிருந்து பெற்றார் என்பது, இஸ்ரயேலின் 12 கோத்திரமும் ஆபிரகாமின் இயற்கையான வித்து என்பது அவர்களிடம் வாக்களிக்கப்பட்ட சிறப்பு ஆசீர்வாதங்கள் உண்டு என்பது பழைய ஏற்பாட்டில் தெளிவாக உள்ளது.

இருப்பினும், நம் தொடக்க உரையில் கண்டது போல, ஈசாக்கின் ஒன்று விட்ட மூத்த சகோதரரான இஷ்மயேல் மறந்துபோகப்படவில்லை.

இஷ்மயேலின் நேரடி சந்ததியினர் அரபு உலகின் ஒரு பகுதி. ஆகாரின் இந்த மகனின் ஆசீர்வாதம், அரபு உலகின் எஞ்சியவர்களுக்கு ஆவிக்குரியதாக இருக்கலாம். அவர்கள் ஆபிரகாமை உயர்வாக கருதுகிறார்கள். அவர்கள் அனைவரும் ஆபிரகாமை ஆவிக்குரிய பிதாவாக கருதுகிறார்கள்.

எசேக்கியேல் 38 ஐ நோக்கி வடிவமைத்தல்

எசேக்கியேல் 38 இல், வடக்கிலிருந்து வந்த படையெடுப்பாளரான கோகின் கூட்டாளிகள் ஈரான் (பெர்சியா), துருக்கி (தோகர்மா), கூஷ் (ஒருவேளை ஏமன், விக்கிபீடியாவில் "கூஷ் (பைபிள்)" ஐப் பாருங்கள்), லிபியா (பூத்) மற்றும் கோமேர் (ஒருவேளை மேற்கத்திய ஐரோப்பா, வெளிப்படுத்துதல் **17:14** ஐ ஒப்பிடுக). 1 இந்த படையெடுப்பிற்கு அக்கறை காட்டாத மற்றொரு கூட்டணியில், சவுதி அரேபியா (ஷெபா மற்றும் தேதான்), தர்ஷீசு வணிகர்கள் மற்றும் அவர்களின் இளம் சிங்கங்கள் (ஒருவேளை இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா ஆஸ்திரேலியாவாக இருக்கலாம்) அடங்கும். இந்த விஷயத்தில் சவூதி அரேபியாவின் வட்டத்தில் இருக்கும் அரபு நாடுகளின் இஸ்ரயேலுடனான நல்லிணக்கம் சரியான திசையில் கட்டமைக்கப்படுவதாக தெரிகிறது.

துருக்கி (தோகர்மா) கொக் மற்றும் ஈரானுடன்

கூட்டணி வைத்திருப்பதை கவனியுங்கள். இது முரணமாக இருப்பதாக தோன்றுகிறது. ஏனென்றால் துருக்கி ஒரு சுன்னி நாடு. ஆனால் கோக்கின் மற்றொரு முக்கிய நட்பு நாடு ஷியைட் ஆகிய ஈரான். கிழக்கு மத்தியதரைக் கடலில் எரிவாயு செல்வம் காரணமாக "கிரீஸ், இஸ்ரயேல், சைப்ரஸ் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் வளர்ந்து வரும் கூட்டணியில்" இருந்து துருக்கி விலகிச் செல்கிறது. எனவே அவர்கள் இஸ்ரயேலுக்கு எதிராக ஒன்று சேர ஒரு தனி உள்நோக்கம் கொண்டிருக்கலாம்.

### இஸ்ரயேலின் கடந்தகால மோதல்கள்

1948 ல் இஸ்ரயேல் தனது சுதந்திரத்தை அறிவித்தபோது, அவர்கள் சுற்றியுள்ள அரபு நாடுகளால் படையெடுக்கப்பட்டார்கள், ஆனால் தேவனின் கிருபையால் தப்பிப்பிழைத்தார்கள். பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1967 ஆம் ஆண்டின் ஆறு நாள் போரில் தேவன் ஒரு அற்புதமான வெற்றியை அவர்களுக்கு கொடுத்தார்.

மேலும் ஆறு ஆண்டுகளுக்கு பிறகு, 1973ல், இஸ்ரயேல் கிட்டத்தட்ட தோற்று போனது, ஆனால் தேவனால் காப்பாற்றப்பட்டது.

இந்த மோதல்கள், கோக் தனது கூட்டாளிகளுடன் தாக்குதல் நடத்தும்போது தேவையான அனுபவத்தை அவர்களுக்கு அளிக்கிறது. அப்பொழுதும் இஸ்ரயேல் மிகவும் அழுத்த படும் ஆனால் ஜெபத்தின் மூலம் காப்பாற்றப்படும்.

### எசேக்கியாவின் விடுதலை

ஏசாயா 36-38 அத்தியாயங்களில், எசேக்கியாவின் நாட்களில் அசீரியாவின் இராஜாவான சனகெரிப் எருசலேமுக்கு எதிராக ஒரு பெரிய தாக்குதல் நடத்திய நிகழ்வு பதிவுசெய்யப்பட்டுள்ளது. அந்த தாக்குதல் பரவலாக இஸ்ரயேலின் வரவிருக்கும் விடுதலையின் ஒரு பாடமாக கருதப்படுகிறது. இது சுவிசேஷ யுகத்தின் தற்போதைய அறுவடையின் முடிவில் எதிர்பார்க்கப் படுகிறது.

அப்பொழுது யூதாவுக்கு காரியங்கள் முதலில் சரியாக நடக்கவில்லை. முன்னேறிவந்த அசீரியாவிடத்தில் அவர்கள் ஒவ்வொரு நகரமாக இழந்து வந்தார்கள். ஆனால் எருசலேம் அற்புதமாக விடுவிக்கப்படும் என்று தேவன் ஏசாயா மூலம் வாக்களித்தார். நம் நாளிலும் அது போலவே நடக்கும்.

யோயேலும் மீகாவும் ஏசாயாவின் சமகாலத்தவர்கள், அசீரிய அச்சுறுத்தலின் போது வாழ்ந்தவர்கள். எசேக்கியாவின் அனுபவம் யோயேல் 2 மற்றும் மீகா **5: 5,6** ஆகியவற்றிலும் பிரதிபலிக்கிறது. அவை இஸ்ரயேலின் எதிர்கால விடுதலையை பற்றியது என்று பெரும்பாலும் கருதப்படுகிறது.

### விடுதலைமுடிவான விளைவு

தற்போதைய முன்னேற்றங்களை ஆர்வத்துடன் கவனிக்கிறோம், எது வந்தாலும், கிறிஸ்துவின் வாக்குறுதியளிக்கப்பட்ட இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கான தேவைகளை தேவன் வழிநடத்துகிறார் என்பது நாம் அறிவோம். நெருக்கடியின் நேரத்தில் இஸ்ரயேல் யெகோவா தேவனிடம் முறையிடும். யோயேல் அவர்களின் அவசரகாலத்தைக் குறித்து அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்,"நீங்கள் உங்கள வஸ்திரங்களை யல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்... அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங் கொண்டு,... வடதிசைச்சேனையை உங்களுக்குத் தூரமாக விலக்கி" (யோயேல் 2: 13 - 20) இஸ்ரயேலை தங்கள் மேசியாவிடத்தில் கொண்டுசேர்க்க தேவன் முற்பிதாக்களை உயிர்தெழுப்புவார் (மீகா 5: 5) ஒரு தேசிய மனந்திரும்புதல் நிகழும் (சகரியா 12:10), தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தபடி, பூமியின் அனைத்து குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்.